விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளுக்கு...


74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 29 புதன்கிழமை (14.08.2002) தொலைபேசி 3378 ஒலி 238

## ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்க மறுப்பு

# ஜனாதிபதி முறைமையை ஒழிக்க பொ. ஐ. முன்னணி ஆதரவு !

### பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் முடிவு

(நமது நிருபர்)

**நாட்டில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க பொ.ஐ. முன்னணி தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று கட்சியின் பாராளுமன்றப் பொதுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

பொதுஜனஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுக்காலை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸவின் தலைமையில் நடைபெற்றது.

1978ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பில் ஜனாதிபதிக்கு அதிஉயர் நிறை

(10ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான திகதியை நிர்ணயிக்க அமைச்சர் மிலிந்த நோர்வே பயணம்

### இன்று அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் சமாதானச் செயலக பணிப்பாளர் பேனாட் குணதிலக ஆகியோர் நேற்று நோர்வேக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக புறப்பட்ட இவர்கள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும் இப்பேச்சுவார்த்தை நோர்வே நேரப்படி காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும், அமைச்சர் மிலிந்தவுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் நோர்வே வெளியுறவுப் பிரதியமைச்சர் விடார் ஹெல்

(10ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட துப்பாக்கிக்கு அனுமதிப்பத்திரம் உண்டாம்

### நீதிமன்றில் ஈ. பி. டி. பி மனு

(திருநெல்வேலி)

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ் நீதிமன்றில் நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணையின் போது ஈ.பி.டி.பி அமைப்பின் சார்பில் மனுவொன்று மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த மனுவில், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈ.பி.டி.பி அமைப்பின்

(10ம் பக்கம் பார்க்க)

## நெடுமாறனின் தேசிய இயக்கத்தை தமிழக அரசு தடை செய்தது

(சென்னை)

பழநெடுமாறன் தலைமையிலான தமிழர் தேசிய இயக்கம் தமிழக அரசினால் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 8ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக தமிழர் தேசிய இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

பழநெடுமாறனும் அவரது கட்சி உறுப்பினர்களும் தமிழகத்தின் அமைதிக்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதால் ...தாக முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதேவேளை பழநெடுமாறன் கடந்த முதலாம் திகதி இரவு தமிழகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்

## சாவகச்சேரியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு நீதிமன்றில் ஒப்படைப்பு

# எலும்புக்கூடு நீதிமன்றில் ஒப்படைப்பு

(மந்திகை)

சாவகச்சேரிப் பகுதியில் பொலிசாரினால் மீட்கப்பட்ட 3 மனித மண்டையோடுகளுடன் கூடிய எலும்புக்கூடுகள் அடங்கிய 4 பொதிகள் மற்றும் ரி 56 ரக துப்பாக்கி ஒன்று ஆகியன பொலிசாரால் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி கெருடாவில் மாணாவளை வீதியில் இராணுவ உபகர

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கடற்பயணம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஜே. வி. பி. எச்சரிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிப்பதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்போகும் தீர்வு விடயங்கள் குறித்து அரசாங்கம் பகிரங்காமாக

(10ம் பக்கம் பார்க்க)

அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக தமிழர் தேசிய இயக்கம் தடைசெய்

அமைதிக்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதால் அக்கட்சி தடை செய்யப்பட்டுள்ள

கடந்த முதலாம் திகதி இரவு தமிழகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (த)

# யாழ். மாநகர முதல்வர் கந்தையன் சபை உறுப்பினரால் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையனை மாநகர சபை அலுவலகத்திற்குள் புகுந்து சபை உறுப்பினர் ஒருவர் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்று பி.பகல் 2.30 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள மாநகரசபை அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப மாநகர சபை உறுப்பினர் தனது சகாக்களுடன் மாநகர சபை முதல்வரின் அலுவலகத்திற்குள் புகுந்து முதல்வருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும், வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் முதல் வரை அவ் உறுப்பினரும் சகாக்களும் சேர்ந்து தாக்கியதாகத் தெரியவருகின்றது.

முதல்வரின் அலுவலகத்திலுள் இடம்பெற்ற களேபரத்தினால் மாநகர சபை ஊழியர்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

அவ் ஊழியர்களே இருதரப்பினரையும் விலக்குப் பிடித்து சண்டையை நிறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(10ம் பக்கம் பார்க்க)


ஹற்றன் நஷனல்

சுபாசிறி

சொந்த தேவைகளுக்கான கடன் திட்டம்

உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட, உங்கள் தேவைகளுக்கெல்லாம் கைகொடுக்கும் தனிப்பட்ட கடன் திட்டம்

இதோ! உங்கள் உற்றதுணையான சுபாசிறி கடன் பற்றிய விபரங்கள்

* ரூ. 25,000/- முதல் ரூ 400,000/- வரை கடன் வசதி பெறலாம்
* மூன்று வருடங்கள் வரை மீளச் செலுத்தும் வசதி
* கவர்ச்சிகரமான வட்டி வீதம்
* எழுத்து வேலைகள், பத்திரப்படுத்தல்கள் குறைவு

மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை

இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,

தொலை பேசி :- 021 - 2787, 021 - 3463

தொலை நகல் :- 021 - 3194,

[C/4634]


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராசி பலன்

14-8-2002
(ஆடி29, புதன்)
சஷ்டி மு.ப11 42வரை
சித்திரை காலை 7 33வரை
ராகுகாலம்-12 05-1.35
நல்லநேரம்-4 35-6·05

**மேடம்**
நண்பர்கள் சந்திப்பு, சென்றஇடத்தில் செல்வாக்கு தெய்வசிந்தை, தனவரவு

**இடபம்**
செய்தொழில்விருத்தி, சந்தோசம், காரியஅனுகூலம், உடல்நலம்

**மிதுனம்**
வியாபாரநன்மை, சொத்துக்களால் கவலை, குடும்பசுகம், தேவையற்றவிவாதம்

**கடகம்**
கல்வியில்முன்னேற்றம், மனச்சஞ்சலம். பகைவர் நேசம், முயற்சிதாமதம்

**சிங்கம்**
இனியஅனுபவம், அன்னியர்சந்திப்பு, புதியபொருள் சேர்க்கை, காரியநன்மை

**கன்னி**
எதிர்பாராதநன்மை, பொருள்விரயம், கௌரவக்குறைவு, முயற்சிதாமதம்

**துலாம்**
நல்லமுயற்சி, கற்பனை மிகுதி, சயனசுகம், பெரியோர் சந்திப்பு

**விருச்சிகம்**
அமைதிக்குறைவு, பிரயாணம், காரியதாமதம், பொருள்விரயம்

**தனுசு**
காரியஅனுகூலம், குடும்பசுகம், மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை

**மகரம்**
சுபநிகழ்வு, அதிகபிரயாசை முயற்சிபலிதம், பிறர்உதவி

**கும்பம்**
கட்டுப்பாடு, புதியதொழில் சிந்தை, உடல்நலக்குறைவு, மனச்சோர்வு

**மீனம்**
எதிர்பாராத பிரச்சினை, காரியதடங்கல், நண்பர்கள் வெறுப்பு, சிறுவியாதி

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## யாழ். குடாநாட்டில் அமுல் படுத்தப்படவுள்ள மனித உரிமைகளுக்கான கல்விக்குழுவின் செயல் திட்டங்கள் குறித்து நேற்று ஆராய்வு

(தென்மராட்சி)
யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மனித உரிமைகள் கல்விக்கான குழுவின் ஆரம்பக் கூட்டம் நேற்றைய தினம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பிரதேச இணைப்பதிகாரி என் ஜீவேஸ்வரா தலைமையில் நடைபெற்றது,

இக்கூட்டத்தில் பொலிஸ், கடற்படை, யாழ் சிறைச்சாலை, ஐக்கிய நாடுகள்சபையின் அகதிகளுக்கான ஸ்தானிகராலயம், பெண்கள் அபிவிருத்தி நிலையம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருந்தனர்.

ஆணைக்குழுவினால் அமைக்கப்படவுள்ள மனித உரிமைகளுக்கான கல்விக்குழுவின் செயல் திட்டங்கள்பற்றி இக்கூட்டத்தில் மிக விரிவாக ஆராயப்பட்டது.

இராணுவத்தினர், பாடசாலை மாணவர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், செயலக உத்தியோகத்தர்கள் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொலிஸார் மத்தியில்; மனித உரிமைகள் தொடர்பான கல்வி வழங்கப்படவுள்ளதாகவும்,

இந்தக் கல்வியை வழங்குவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயக்குநர் நிமால் ஹப்பு ஆராட்சி மேலும் 4 பிரதிநிதிகள் சகிதம் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-6,77)

## உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது சமாதான முயற்சிக்கு பாதகமாகும்

### தமிழ்க் கூட்டமைப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)
வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஒத்தி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை செப்ரெம்பர் 25 ஆம் திகதி நடத்த வேண்டுமென அரசின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்திவரும் அதேவேளை உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் தற்போது நடத்தப்படுமாயின் அது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சியைப் பாதிக்கும் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் உரிய முறையில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும்,

அந்த நியமனப்பத்திரங்களை இரத்துச் செய்துவிட்டு புதிய தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்ற வகையில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(த)

## வீதி கையளிப்பு

(மந்திகை)
பருத்தித்துறை தும்பளை ஊடான நாகர்கோவில் வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளது.

(உ-23)

## பள்ளிக்குடா மீனவரின் படகு பறிமுதல்

### கடற்படை கைவரிசை

(யாழ்ப்பாணம்)
கிளாலிக் கடற்பரப்பில் வைத்து பள்ளிக்குடாவைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் படகொன்றை கடற்படையினர் பறித்துச் சென்றுள்ளதாக யாழ் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கே.சதீஸ்வரன் என்ற மேற்படி மீனவரின் முறைப்பாடு தொடர்பாக கடற்படையினரிடம் விசாரணை செய்த போது ஒருசில நாளில் உரியவரிடம் படகை ஒப்படைப்பதாக அவர்கள் கூறியிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி ரூபான் சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.

(உ-6)

## டெங்குநோய் ஒழிப்புத்திட்டம்

(சுதுமலை)
வட்டுக்கோட்டை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட சித்தன்கேணி பகுதியில் இன்றுகாலை9 மணிக்கு டெங்குநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் நடைபெறவுள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர் ச பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அப்பகுதி சனசமூக நிலையங்களின் ஏற்பாட்டில்பொதுமக்களின் உதவியுடன் சிரமதான நிகழ்வுகளும் இன்று இடம்பெறவுள்ளன.

(ந-252)

## 91ஆயிரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

வன்னிப்பிரதேசத்தில் கடந்த இரண்டுவருடங்களில் 91ஆயிரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக மனிதாபிமான உதவிகள் அமைப்பின் கண்ணிவெடிகளை அகற்றும் பிரிவின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜோன் தெரிவித்துள்ளார்.

இன்னமும் அகற்றப்படாமலுள்ள கண்ணிவெடிகளை வெளிநாடுகளின் உதவியுடன் அடுத்த ஐந்து வருடங்களுக்குள் அகற்ற முடியும் என்றும் வன்னிப்பிரதேசத்தில் இன்னும் சுமார் 2 மில்லியன் கண்ணிவெடிகள் அகற்றப்படாத நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ந-5)

## கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு சவால்

### ஹக்கீம் கவலை

(கொழும்பு)
வடக்கு கிழக்கு பகுதிமுஸ்லிம்களுக்கு சார்பாக தென்பகுதியில் ஜனநாயகரீதியான சிலநடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்,

குருநாகல் தெல்தெனியா ஜும்மா பள்ளிவாசல் முற்றவெளியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டுஉரையாற்றும்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்;

கிழக்குமாகாணத்தில் வாழும் முஸ்லிம்மக்களின் பாதுகாப்புக்கு சவால்ஏற்பட்டுள்ளது ஊடகங்களும் இது குறித்த விடயத்தில்ஊமைகளாக இருக்கின்றன என்றார்.

நாட்டின் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவந்து அனைத்து இனமக்களும்ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ள நாம் எமது உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

(உ)

## வெள்ளியன்று வன்னி மாவட்டங்களின் அபிவிருத்திக்குழுக்கூட்டம்

(கிளிநொச்சி)
வன்னி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதிவெள்ளிக்கிழமை வன்னிப்புனர்வாழ்வு அமைச்சு செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்டின் மசூர் பாராளுமன்ற உறுப்பினர் சிவனேஸ்வரன் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்;

2002 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் இம்மூன்று மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட 2 கோடி 10 இலட்சம் ரூபா நிதியையும் சம்பந்தப்பட்டபாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்குவது குறித்து இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-8)

## விபத்தில் இளைஞன் காயம்

(மந்திகை)
ரெலிகொம் அதிகாரிகளின் பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் மாலுசந்தி ரெலிகொம் அலுவலகம் முன்பாக இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த அல்வாய் தெற்கைச்சேர்ந்த இரத்தினசிங்கம் சத்தியசீலன் (வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்

(உ-23)

## தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை

(மந்திகை)
பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் தொற்றுநோய்த் தடுப்புநடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகரசபையின் ஏற்பாட்டில், பொது அமைப்புகளின் உதவியுடன் தொற்றுநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், சிரமதானம் ஆகியன நடத்தப்படுவதுடன், துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

(உ-23)

## ★ தொழிற்சாலைகள் கட்டளைச் சட்ட திருத்தம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)
தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் திருத்தம் தொழில் வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்காவினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் படி 68 ஆம் பிரிவிலேயே திருத்தம் செய்யப்படவுள்ளது.

இந்தத் திருத்தத்தின் அடிப்படையில் மாதம் ஒன்றில் பெண்ணொருவர் 60 மணித்தியாலங்கள் மட்டுமே பணியாற்ற முடியும். கர்ப்பிணிப் பெண், பாலூட்டும் தாய் அல்லது இறந்து பிறந்த சிசு ஒன்றைப் பிரசவித்த பெண் ஆகியோர் மேலதிக நேர சேவையில் குறிப்பிட்டகாலத்துக்குள் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இவர்களை மேலதிக சேவையில் ஈடுபடுத்த விரும்பினால் அவர்களிடமிருந்து எழுத்து மூலமான விருப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதைத்தவிர 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் மாதமொன்றுக்கு 50 மணித்தியாலங்களுக்கு மேல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவது மட்டுப்படுத்தப்படவுள்ளது.

(உ-8)

## தனித்திருந்த மூதாட்டிமீது கள்வர்குழு தாக்குதல்

(மந்திகை)
தனித்திருந்த மூதாட்டிதிருடர்களின் கத்தி, வாள்வெட்டிற்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

புலோலிதெற்கு வல்லிபுரக்குறிச்சிஎன்றஇடத்தில் நேற்று முன்தினம்இரவு இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

ரி.இலட்சுமி (வயது70) என்ற மேற்படி மூதாட்டி வீட்டில் தனித்திருந்தவேளை திடீரென நுழைந்த திருடர் குழு சத்தம் போடமுடியாதவாறு தொண்டையை நெரித்ததுடன் வாள், கத்தி என்பவற்றால் மோசமாகத் தாக்கியுள்ளனர்.

எனினும் கள்வர் தமது முயற்சி கைகூடாத நிலையில் தப்பியோடிவிட்டனர்.

மேற்படி மூதாட்டியின்வீட்டில் சிலகாலம்முன்னர் கள்வரால் 20ஆயிரம்ரூபா மற்றும் உடைமைகள்சூறையாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி களவுமுயற்சி குறித்து பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-23)

# சூழல் மாசடைதலின் விபரீதங்கள் குறித்த தெளிந்த அறிவு வளர்முக நாடுகளில் இல்லை

## சென்னைப் பேராசிரியர் செல்வி ஜீ. மைதிலி தெரிவிப்பு

(தென்மராட்சி)

சூழல் மாசடையும் பிரச்சினையைத் தீர்க்க நாம் நாளை முற்படுவோம் என வாழாதிருக்காமல் இன்றே செயல்பட்டு சூழலைப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு சென்னை பொருளியல் சிந்தனைப் பள்ளிப் பேராசிரியர் செல்வி ஜீ. மைதிலி நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெற்ற சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கில் கருத்துரையாற்றும் போது தெரிவித்தார்.

இளம் பொருளியல் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழகதுணை வேந்தர் பேராசிரியர் .பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

சென்னைப் பேராசிரியர் செல்வி மைதிலி அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

சூழலில் ஏற்படும் மாற்றத்தினால் உருவாகக் கூடிய பிரச்சினைகளை ஒரே இரவில் மாற்றிக் கொள்ள முடியாது. மக்கள் மத்தியில் சூழலினால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள், தாக்கங்கள் மற்றும் விபரீதங்கள் பற்றிய தெளிந்த அறிவும் சிந்தனையும் ஏற்பட வேண்டும். சூழல் பிரச்சினைகள் பொருளாதார சிக்கல்களையும், நெருக்கடிகளையும் கூட ஏற்படுத்தி வருகின்றன.

இந்தியாவில் சூழல்மாசடைதல், நீர் மாசடைதல், காடுகள் அழிக்கப்படல் போன்ற பிரச்சினைகள் காரணமாக மக்கள் தமது வாழ்க்கையில் பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். இவற்றில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்காக சூழலியலாளர்களும், தன்னார்வக் குழுக்களும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் சூழலினால் ஏற்படும் பிரச்சினைகள், தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு நன்கு அபிவிருத்தியடைந்த நிலையில் உள்ளது.

ஆனால், வளர்முக நாடுகளில் நிலைமை இன்னமும் முன்னேற்றம் பெறவில்லை.

சூழல் மாசடைதல் பிரச்சினை என்பது உள்ளூர் பிரச்சினை அல்ல, இது பூகோள ரீதியான பிரச்சினை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அத்துடன் இது விடயத்தில் மக்களின் மனோ நிலையிலும் மிகுந்த மாற்றம ஏற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையுரையில் குறிப்பிடுகையில்;

சூழல் மாசடைதல், நீர் மாசடைதல், காற்றுமாசடைதல் போன்ற பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு ஓரளவு எம் மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில்பிளாஸ்ரிக் போத்தல்கள, பொலித்தீன் உறைகள் பைகளின் பாவனை இப்போது அதிகரித்துள்ளன. இவைகளின் கழிவுகளை என்ன செய்வது எனத் தெரியாது மக்கள் உள்ளனர். இங்குள்ள பல குளங்களில் உடைந்த போத்தல்கள் மற்றும் கழிவுப் பொருட்களை வீசி வருகின்றனர். அதனால் குளங்கள பாவனையற்றநிலையில் உள்ளன.

கடந்த ஐந்து வருடங்களாக நாட்டில், பெருந்தெருக்கள், மேல் கொத்மலைத் திட்டம், நிலக்சரித் தொழிலகம் போன்றவற்றை அமைப்பதற்கு அரசாங்கம் எவ்வளவோ பாடுபட்ட போதிலும் கூட, மக்களது தொடர்ச்சியான எதிர்ப்பு, மற்றும் ஆட்சேபனைகள் காரணமாக அவற்றினை அமுல் செய்ய முடியாத நிலையே இப்போதும் இருக்கின்றது. சூழல் மாசடைவதால், இயற்கை அழகும் சுற்றமும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றது எனக் குறிப்பிட்டார். (ஷ-77)

# சாரதிகளுக்கு வினைத்திறமை காண் தடைப் பரீட்சை

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்கள் மற்றும் அமைச்சு அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் சாரதிகளாக கடமை புரிபவர்களிக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை விரைவில் நடத்தப்பட உள்ளதாக, வடக்கு-கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம் சகல திணைக்களத் தலைவர்களிற்கும் கடந்த வாரம் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சாரதிகள் தமது திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் கூடிய விண்ணப்பப் படிவங்களை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சுக்கு கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கும் படியும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (உ-252)

# சின்னம் சூட்டும் விழா

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் இணைந்து நடத்திய முதலுதவி விசேட படையணி சின்னம் சூட்டும் விழா கடந்த சனிக்கிழமை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் இ. சற்குருநாதன் தலைமையில் நடைபெற்றது

35 பாடசாலைகளைச் சேர்ந்த, விசேட முதலுதவிப் பயிற்சி பெற்ற மாணவர்களை, தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான அ. விநாயகமூர்த்தி, என். கே. சிவாஜிலிங்கம் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் யாழ் மாவட்ட அமைப்பாளர் முபீன் ஆகியோர் சின்னம் சூட்டிக் கௌரவித்தனர். (உ-252)

கண் சிகிச்சைக்கென யாழ்.வந்த

# பிரிட்டன் நிபுணர் குழு பணியை ஆரம்பித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள 13 பேர் அடங்கிய பிரிட்டன் கண் சிகிச்சை நிபுணர் குழு, யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று தமது பணிகளை ஆரம்பித்தனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று காலை 9.00 மணியளவில் யாழ் வைத்தியசாலையில் இச் சிகிச்சை நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந் நிகழ்வில், யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ். சதுர்முகம், யாழ். மாநகர முதல்வர் எஸ். சுந்தையன், மேலதிக அரசாங்க அதிபர் து வைத்திலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா அங்கு உரையாற்றுகையில்,

கடந்த 20 வருடங்களாக யாழ். குடாநாட்டு மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு மிகுந்த கஷ்டப்பட்டு வந்தனர்.

தற்போதைய சூழ்நிலையில் அவர்களது தேவையறிந்து செயற்படுவதே எமது கடமை.

மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு நோய் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என்பது எனது கொள்கை.

இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் பலர் தமது உறவுகளுக்குச் சேவை செய்யவந்துள்ளனர்.

இவர்களைப் போன்று இன்னும் பலரைஇங்கு அழைத்து வந்து தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய நான் காத்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார்.

மேற்படி வைத்தியக்குழுவுடன் இங்கு வருகைதந்துள்ள அமெரிக்க சைவசித்தாந்த ஆதீனத்தைச் சேர்ந்த றெசி தொண்டநாதனும் இந் நிகழ்வில் உரை நிகழ்த்தினார். (உ-6)

# நெடுந்தீவுப் பகுதிக்கு விரைவில் மின்சாரம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்கு மின்சாரப் வழங்குவது தொடர்பாக ஆராய, மின்சார சபையின் பொறியியலாளர் குழுவொன்று அண்மையில் அப் பகுதிக்கு விஜயம் செய்தது.

இதன் பிரகாரம் முதல் கட்டமாக மாவிலித்துறை முகத்தில் இருந்து ரீத்திரியாம் பள்ள வரையான பிரதான வீதிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட விருப்பதாகவும், ஏனைய பகுதிகளுக்குப் படிப் படியாக மின்சாரம் வழங்கப் படுவது குறித்துப் பரீசீலிக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-250)

## வடக்கு-கிழக்குஉள்ளூராட்சித் தேர்தலில்,

# புலிகளும் போட்டியிடும் வகையில் புதிதாக வேட்பு மனுக்களை அரசு கோர வேண்டும்

## தே. ஐ. மு, பிரதித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுமாயின் புதிதாக நியமனப் பத்திரங்கள் கோரப்பட வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம். எல். ஐ எம். ஹிஸ்புல்லா கேட்டுள்ளார்.

அவர் இதுதொடர்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள இத்தேர்தலை நடத்துவதால், தற்போது நட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலைகளுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாது.

இத்தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட நாட்டின் அனைத்து கட்சிகளும் போட்டியிடக்கூடிய வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.

ஆகவே, இவ்வாறான சூழ்நிலையில் தேர்தலை நடத்துவது எந்தவிதமான சிக்கலையோ, பிரச்சினைகளையோ ஏற்படுத்தப்போவதில்லைஎன்று குறிப்பிட்டார்.

மேலும்அரசாங்கம்இத்தேர்தலை ஜனநாயக அடிப்படையில் அனைவரும் போட்டியிடக்கூடியவகையில் உடனடியாகபுதிய வேட்பு மனுக்களைக்கோரி அதனடிப்படையில்நடத்த முன்வருமானால், அதற்கு ஆதரவு தருவதாகவும்,

அவ்வாறு தேர்தல் நடத்தப்பட்டு தலைவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியதும் இன்றைய சூழ்நிலையின் அத்தியாவசியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தற்போதைய நிலையில் அவசியமில்லை என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றைய சூழ்நிலையில் தேர்தல்ஒன்று இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்பட்டதன் பின்னர் தான் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தான் வடக்கு-கிழக்கு பகுதிகளில் பல புனரமைப்புக்களை மேற்கொள்ள முடியும்எனவும் தெரிவித்துள்ளார்.

தமதுகட்சியையும் தன்னையும் பொறுத்தமட்டில் இவ்வாறு தேர்தல் நடத்தப்படுவது சாலச்சிறந்தது அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க வடக்கு கிழக்கு பகுதியில் செப்ரெம்பர் 25 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத்தேர்தல் நடைபெறும் எனவும், அதன் பெறுபேற்றின் அடிப்படையில்முஸ்லிம் காங்கிரஸின் பலம் உயர்ந்து ஓங்கிநிற்கும்எனவும் முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது (உ-8)

# நாட்டைமீட்கபேதங்களை களைய வேண்டும்

## அஸ்கிரிய பீட மகாநாயக்கர்

(கொழும்பு)

படுமோசமான பொருளாதார வங்குரோத்திலிருந்து நாட்டை மீட்கும் விடயத்திலும், சமாதான விடயத்திலும் பிரதமர் மேற்கொளளும். முயற்சிகளுக்கு சகல கட்சிகளும் தமக்குள்ள அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒத்துழைப்பு தரவேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் உடுகம சிறீபுத்தரகித்த தேரர் பேராதனையில் கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்.

பிரதமரின் முயற்சிகளுக்கு ஏற்படுத்தப்படும் குறுக்கீடுகளை எவ்விதத்திலும் பாராமுகமாக விட்டுவிடமுடியாது. பிரதமர் விசுவாசமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். மக்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் இருந்தால் மட்டுமே நாட்டைகாப்பாற்ற முடியும். பல்வேறு கட்சிகளும்வேறுபாடுகளைகைவிட்டு ஒத்துழைப்பார்கள் என்று தான் நம்புவதாக ,அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பிரம்மோற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடலியடைப்பு புதறானை ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானபிரம்மோற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமானது.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஷ)

# பரிசளிப்பு விழா

(கொழும்புத்துறை)

யாழ். மத்திய கல்லூரி, மக்கள் வங்கியுடன் இணைந்து நடத்திய, கல்லூரியின் முன்னாள் அதிபர், டாக்டர் டி.ரி. நைல்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உள்ளக விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழா இன்று பி.ப. 3.00 மணிக்கு கல்லூரி அதிபர் க. இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வடவலய உதவிப்பொது முகாமையாளர் இளம்பிறை நாதன கலந்து கொள்ளவுள்ளார். (உ-262,

# ஈழத்துக் கவிதை உலகில் இருள் துடைக்கும் பவித்திரனின் "உரசல் ஓசை" கவிதைத் தொகுதி

## ~ திறனாய்வுக்களம் ~




| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | உரசல் ஓசைகள் |
| ஆக்கியோன் | - | பவித்திரன் (நாவலன்) |
| வெளியீடு | - | தேசிய கலை இலக்கியப் பேரவை |
| பக்கங்கள் | - | 63 |
| விலை | - | ரூபா 100;- |

மீன் குஞ்சுக்கு நீச்சல் வருவதும், புலிக்குட்டிக்குப் பாய்ச்சல் வருவதும் வியப்புக்குரியனவில்லையே, அதுபோலத்தான் பவித்திரன் அவர்களுக்கு கவிதை வருவதும், ஏனென்றால் நாவலன் என்ற இயற்பெயருடைய பவித்திரன், கவிஞர் இ. முருகையன் அவர்களுடைய மைந்தர். நீண்ட நெடுங்காலமாகவே கவிதையுடனும் கவிஞர்களுடனும் ஊடாடியவர். முருகையன் அவர்களுடைய சாயல் ஓரளவு ஒத்து இருந்தாலும் தனக்கென்றொரு பாணியமைத் துப்பாப்புனைபவர் மிகுந்த யதார்த்தவாதி, இளகிய நெஞ்சமும் ஈரமனமும் ஈகைக் குணமும், இயற்கையுடன் இழைந்து தனைமறக்கும் சுபா

**த. ஜெயசீலன்**

வமும் உடையவர்.

### கவித்துவம்

''இயற்கை முழுவதும் ஒரு புதுப்பொலிவு கொண்டு பூத்து நின்ற காலப்பொழுதுகள் அவை. அந்த உலகின் வசீகரம் என்னுள்ளும் பூத்துச் சொரிய உலகமே ஒரு காவியமாயச் சோபை கொண்டு எழுதாக்கவியாய், பேசாப் பொருளாய் கூர்ந்து நின்று கிளர்வூட்ட நான் முற்றிலும் கவித்துவமெய்தி விட்டேன். ஆம்! அப்படித்தான் உணர்வுகள் கவித்துவமெய்திவிட்ட பிறகு வாழ்வின் வனப்பை வரையப் பேச்சுகள் ஏன்? பழகு தமிழின் இனிமையில் பரவசமாய் விட்ட எனக்கு வார்த்தைகளிற்கு அப்பாற்பட்ட ஆத்மார்த்தமான அனுபவம் கிட்டிற்று'' (என்னுரை பக்கம் iii) என்று கூறும் பவித்திரனின் 1ம் கவிதைத் தொகுதி ''உரசல் ஓசைகளாய்'' தேசிய கலை இலக்கிய பேரவை வெளியீடாக வெளிவந்துள்ளது.

### படைப்புந்தல்

கவிதை என்றால் என்ன என்ற கேள்வி காலகாலமாக தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அவரவர்கள் தமது விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப கவிதைக்கு வரைவிலக்கணம் கூற முற்பட்டாலும் அவை எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு, உண்மையான கவிதை - கவிதையாகவே இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கிறது. தமிழ்க்கவிதை பற்றி சரியாக அறியாதவர்கள், அதன் ஆழ அகலங்கள் அறியும், விளங்கிக்கொள்ளும் ஆற்றல் அற்றவர்கள். தம்நிலைக்கு ஏற்ப ஏதோ ஒன்றைக் கவிதை என்கிறார்கள். 'இருக்கும் இடத்தில்' இருந்து கொண்ட அவர்களின் பேச்சுகளும் எடுபடுகின்றன. வாழும் கவிதையை வடித்துக்காட்ட முடியாதவர்கள், முயலாதவர்கள் இன்றைய சூழலிலும் 'படைப்புந்தல்' தமக்கில்லை என்று தப்பிக்கொள்கிறார்கள். விமர்சகர்கள் என்போர் தம் வாய்ப்பான சில விடயங்களை மீண்டும் மீண்டும் ஒப்பிக்கிறார்கள். இவை ஈழத்தமிழ் கவிதையுலகின் சாபக்கேடுகளாக அன்றும்

## படைப்புந்தலால் உருவானது "உரசல் ஓசைகள்"

இருந்தன, இன்றும் இருக்கின்றன. இந்நிலையில் தான் பவித்திரனுடைய உரசல் ஓசைகள் வெளிவந்துள்ளது. இத்தொகுதி ஈழக் கவிதை உலகில் இருண்மை துடைக்கும் என்பதில் ஆச்சரியமில்லை.

### சொல்லாட்சியும் மொழி நடையும்

பவித்திரனுடைய சொல்லாட்சி, மொழியாட்சி என்பன சிறப்பானவை. இவர் கையாளும் சாதாரண சொற்களும் அவை சேரும் ஒழுங்கில் ஏதோ ஒரு சீரான லயத்தில் மந்திரம் போல மாறிவிடுகின்றன. சில அணிகளில் புதுமையும் பொலிவும் மிளிர்ந்திருக்கின்றன. இவருடைய பல கவிதைகள் இயற்கையுடன் தன்னை இணைத்து அதிலிருந்து எத்தனையோ விடயங்களை உணரும் தன் உணர்ச்சிக் கவிதைகளாக விளங்குகின்றன. அவற்றினூடாக மானுடம இழைந்து ஓடுகிறது. இவ் இயல்புகள் இவருடைய கவிதையின் தனித்துவங்களாகின்றன.

''பால் நிலவும் இதழோரம் பாயக் கண்டேன். உன் இதழ் ஒளியில் நான் நடப்பேன்''
'' உன் வீட்டின் ஓர் கோடியில் மனதகத்துக் கதவில் பதிவாயிற்று கவிதை''
''கவிமன்னன் யானென இரவின் தாளில் மௌன வரியொன்று பதியல் ஆகும்''
''தல் சீவி முகிலினங்கள் தடுமாறி ஏகும்''
''மானுடம் புதுக்கும் வீச்சு என்னுள் மிகுந்து எழுந்தேன்''
இவை பதச் சோறுகள்.

வாழ்வின் வசீகரங்களையும், வாழ்விடம் கேள்விகளையும், வாழவின் வனப்புக்களையும், வாழ்வின துயரங்களையும் என வாழ்வின் பல பரிமாணங்களை இவருடைய கவிதைகள் பேசுவது சிறப்பானது.


'' காற்று மிக மெலிதாய் மேனி வருடி அட தம்பி!
முகவாட்டமேன்?
வாழ்க்கை இனிது
என்றுரைத்து அப்பால் நகரும்
மீண்டும் மீண்டும் புதிய உயிர்ப்புடன் எழுவேன்
ஒற்றை மனிதனாய் தன்னந்தனியனாய்
வெட்டியே எனைப் புதைத்திடினும்
மிதித்து உதைத்து வதைத்திடினும்
சுட்டெரித்துச் சாம்பல் ஆக்கிடினும் சுடர்ஏந்தி
மீண்டும் மீண்டும் புதிய உயிர்ப்புடன் எழுவேன்
அதன் முடிவில்
புதிய சூரியோதயம்''


இதனூடாக தனது செல்வழியையும் தன் கவிதையின் ஆழ அகலத்தையும், தன்னையும் பவித்திரன் உயிர்த்துடிப்புடன் உணர்த்திச் செல்கின்றார்.


### சிந்தனை அரிது


அருமையான அணிந்துரையொன்றை கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி அளித்துள்ளார். அது அவருடைய உள்ளக் கிடக்கை மட்டுமல்ல. நல்ல கவிதைகளை நேசிக்கும் எல் லோருடைய உள்ளக்கிடக்கையும் அது தான்.

''நவீன கவிதையுலகின் மிகத் தெளிந்த அறிவுடையவர் ஒருவரின் அங்கீகாரம் பெற்றால் தான் அவன் கவிஞன், கலைஞன் என்ற வாய்ப்பாடுகளை தூக்கிப் பிடிக்கவும், அவற்றை வெளியிடவும் குழு நிலைப்பட்டு நின்று கூட்டவும் கொக்கரிக்கவும் தான் அவதிப்படுகிறோமே தவிர ஆத்மாத்த பூர்வமாக நாம் சிந்திப்பது. என்பது மிக மிக அருமையாகி விட்டது.'' ஈழத்தின் கவிதையின் புதிய போக்கிற்கு பவித்திரனின் 'உரசல் ஓசைகளும்' கட்டியங் கூறக்கூடியவை எனலாம்.



மல்லிகை டொமினிக் ஜீவாவின் பவளவிழா யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது. பவளவிழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட ''மல்லிகைச் சிறுகதைகள்'' நூலின் பிரதியை பேராசிரியர் நந்தியிடமிருந்து செம்பியன் செல்வன் பெற்றுக்கொள்கிறார். செங்கை ஆழியான் அருகில் காணப்படுகிறார்.


காலி றுகுணு தேசிய கல்வியியற் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் சமாதானத் தொடர்பை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்திய GTZ நிறுவனத் திட்டப் பணிப்பாளர் கலாநிதி ஜீ.குக் அவர்கள் மேற்படி கல்லூரியுடன் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்தபோது மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றார்.


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இல்ல மெய் வல்லுநர் போட்டி-2002 நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் நாகரட்ணம் அவர்கள் உரையாற்றுவதையும், கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி. கமலாநதன் அமர்ந்திருப்பதையும் காணலாம்.


அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்ற கராத்தே பயிற்சி முகாமின்போது பேராசான் ஷிகான் பொனி றொபேட், ஆசான் றஞ்சித் சைலேந்திரகுமார் ஆகியோர் தற்காப்புக் கலைநுட்பத்தை செய்து காண்பிப்பதையும் மாணவர்கள் அவதானிப்பதையும் காணலாம்.


பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பழைய மாணவியர் சங்க கனடா கிளையினரை வரவேற்கும் நிகழ்வில் பாடசாலையில் அதிபர் திருமதி. செல்வமலர் சுந்தரேசன் உரையாற்றுவதையும் கனடா கிளையின் உப செயலாளர் சுவேதி சுரேஸ் பொருளாளர் யசோ ஜெயக்குமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.


அருட்தந்தை அன்ரனி சிறில் தலைமையில் அண்மையில் யாழ். வந்த ''சீதுவ'' சமாதானக் குழுவினர் நல்லூர் ஞானோதய பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கியபின் கூட்டாக எடுக்கப்பட்ட படம். படம்: ஆ. ஜென்சன் றொனால்ட்

# இன்று ஒரு தகவல

## பரங்கியர் போனாலும்

பாரத நாட்டை விட்டுப் பரங்கியர் (போர்த்துக்கீசியர்) வெளியேறிய போதும் தமிழ் நாட்டிலுள்ள பரங்கி மலை போகாது பரங்கிப் பேட்டைபோகாது பரங்கிக் காய் போகாது பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே என்ற பாட்டும் போகாது. பரங்கியர் தமிழகத்திற் போந்து தமிழ் மக்களொடு கலந்து பழகிய காலத்தில் சில பரங்கிச் சொற்கள் பழகு தமிழில் புகுந்து வழங்கலாயின. அவற்றுள் ஒன்று வீடு தோறும் உள்ள சன்னல் 'பின்னலை இல்லாத தலையில்லை சன்னல் இல்லாத வீடில்லை' என்று பெண்கள் பேசிக் கொள்வதுண்டு. சன்னல் என்பது பரங்கியர் சொல் என்றால் அன்னார் வருவதற்கு முன் சன்னல் வைத்து வீடு கட்டும் வழக்கம் தமிழ் நாட்டில் இல்லை என்று எண்ணி விடலாகாது. பழங் காலத்தில் சிறப்புற்று விளங்கிய காவிரிப் பூம் படினத்தின் கடற் கரையில 'காலதர்' வைத்த மாளிகைகள் கண்ணுக்கினிய காட்சியளித்தன என்று செந்தமிழ்க் காவிய மாகிய சிலப்பதிகாரம் கூறுகின்றது. காலதர் என்பது சன்னல். கால் என்பது. காற்று அதர் என்பது வழி. வீட்டினுள்ளே காற்று வரும் வழியைக் காலதர் என்றனர் பண்டைத் தமிழர். 'வின்டோ' என்ற ஆங்கிலச் சொல்லுக்கும் பொருள் அதுவே என்பர் பல கண்களையுடைய காலதருக்குப் 'பலகணி' என்பது பெயர். இவற்றோடு 'சாளரம்' என்ற சொல்லும் முன்னாளில் வழங்கி வந்தது. 'சாளரந் தோறும் தோன்றும் சந்திரவுதயம் கண்டார்' என்று பாடினார் கம்பர் இப்போது இம் மூன்று சொற்களும் பெரும்பாலும் ஏட்டுத் தமிழில் அடங்கிவிட்டன. சனனல் என்பது வீட்டுத் தமிழாய் விட்டது.

வீடு தோறும் உள்ள தாழ்ப்பாளைத் திறப்பதற்குப் பயன்படும் கருவியைத் திறவுகோல் என்பர் தென்னாட்டார். மலையாளநாட்டில் அதனைத் தாழ்க்கோல்என்பர் ஆயினும் இப்பொழுது 'சாவி'யே நாடெங்கும வழங்குகின்றது. பூட்டைத் திறப்பது சாவி, கடிகாரத்திற்குக் கொடுப்பது சாவி, 'சாவி' பரங்கியர் தந்த சொல் இதனோடு 'கீ' என்ற ஆங்கிலச் சொல்லும் கிளிமொழிபோல வழங்கி வருகின்றது

கோழி தமிழ் நாட்டுப்பழம் பொருள். தென்னிந்திய மொழிகளில் எல்லாம் கோழி என்ற சொல் உண்டு. சோழ நாட்டின் பழைய தலை நகராகிய உறையூருக்கு கோழி என்பது மறு பெயர். மேல் கடற்கரையிலுள்ள ஓர் ஊரின் பெயர் கோழிக்கோடு. தமிழ் மொழியின் சிறப்பெழுத்தாகிய ழகரம் பரங்கியர் வாயில் நுழையவில்லை. அவர் அதனை ரகரமாக்கினர். அதனாலன்றோ சோழமண்டலம் என்ற சொல் 'கோரமண்டல' ஆயிற்று. தமிழ் நாட்டுக் கோழியின் பண்பும பயனும் அறிந்த பிறநாட்டார், அதனைத் தம்நாடுகளில் கொண்டு வளர்ப்பாராயினர். கோழிப்பண்ணை பெருகிற்று. மத்திய ஆசியா வழியாக ரஷ்யாவுக்கும் தமிழ் நாட்டுக் கோழி சென்றது. ரஷ்ய மொழியில் கோழியைக் குறிக்கும் 'கூர்' என்னும் சொல் கோழியின் சிதைவே என்பர் ஆராய்ச்சியாளர்.

இவ்வாறு கோழிச் செல்வத்தைப் பேணிவளர்த்த தமிழ் நாட்டில் புதுவகையான கோழிக்குலமொன்று வந்து சேர்ந்தது. அதனைக் கொண்டு வந்தவர் பரங்கியர். நாட்டுக் கோழியினும் பெரியதாய் விசிறிபோன்ற சிறகுடைய தாய் விளங்கிய பரங்கிக் கோழி. வான்கோழி என்று தமிழ் நாட்டில் பெயர் பெற்றது. கப்பல் வழியாகப் பரங்கியர் கொண்டு வந்த இக் கோழியைக் 'கப்பற்கோழி' என்றும் வழங்கினர்.

மேலை நாட்டு மொழியில் 'டர்க்கி' என்னும் பெயரால் குறிக்கப்படும் இக்கோழி, தமிழ் நாட்டில் தருக்கும் செருக்கும் தலைக்கொண்டு திரிந்தது. நாட்டுக் கோழியுடன் கலந்து பழகாமல் தன்னை உயர்ந்த இனமாகக் கருதிற்று. மயிலும் தானும் ஒரு குலமென்னும் மமதை கொண்டது. பூஞ்சோலையில் கானமயில் தோகையை விரித்து ஆடக்கண்டு தானும் அதன் அருகே தன் விசிறிச் சிறகை விரித்து வீசிவீசி ஆடிற்று. இக்காட்சியைக் கண்டார் ஒரு கவிஞர். அவர் நெஞ்சம் பொறுக்கவில்லை. கவியரங்கத்தில் மேதையரோடு பேதையரும் களி நடமாடும் காட்சி அவர் நினைவிற்கு வந்தது. அந்நிலையில் எழுந்தது. ஓர் அருமையானபாட்டு.

'கானமயிலாடக்கண்டிருந்த
வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்
துத்–தானும் தன்
பொல்லாச் சிறகைவிரித்தாடி
னாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி'
என்ற பாட்டு

இப்போது கற்றார்க்கும், கல்லார்க்கும் களிப்பருளும்களிப் பாகும்.

இப் பாட்டு ஒளவையார் இயற்றியதாகக் கருதப்படும் மூதுரையிற் காணப்படுவதால் ஓர் ஆராய்ச்சி கிளம்பிற்று. தமிழ் நாட்டுக்கு வான்கோழியைக் கொண்டு வந்தவர் பரங்கியர், அக்கோழிப்பண்ணை இந் நாட்டில் பெருகி வளர்ந்த பின்னரே இப் பாட்டுப்பாடப் பட்டிருத்தல் வேண்டும். ஆதலால் பரங்கியர் வந்த காலத்திற்குப் பின்னும் ஓர் ஒளவையார் இருந்தார். பழங்காலத்தில் ஓர் ஒளவையார். இடைக் காலத்தில் ஓர் ஒளவையார், பிற்காலத்தில் ஓர் ஒளவையார் என்று முடிவுகட்டினர். இத்தகைய ஆராய்ச்சியைத் தமிழகத்தில் எழுப்பிய வான்கோழி வாழ்கஎன்று வாழ்த்துகின்றோம், வீட்டுக்குச் சன்னலும், பூட்டுக்குச் சாவியும், தந்து நாட்டை விட்டு வெளியேறிய வெள்ளைப் பரங்கியரையும் உள்ளங் கனிந்து வாழ்த்துகின்றோம்.

டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை.

# பிரதமர் - ஜனாதிபதி சந்திப்புக்கான முன் ஆயத்தங்கள் இதுவரை இல்லை

## இருதரப்பு வட்டாரங்களும் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசியமுன்னணி அரசாங்கத்துக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்குமிடையே அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைமுடிவுக்குக்கொண்டு வரும் வகையில் பிரதமரும் ஜனாதிபதியும் சந்திப்பதற்கான எவ்வித ஆயத்தங்களும் இதுவரை செய்யப்படவில்லை என இரு தரப்புவட்டாரங்களும் தெரிவித்துள்ளன.

இவர்கள் இருவரும் சந்திப்பதற்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்பட வில்லை. இருந்த போதிலும் இவ்விடயங்கள் தொடர்பாகஇருதரப்புக்கும் இடையேபேச்சுவார்த்தைகள் நடை பெற விருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.

அரசியல் நெடிக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காக இவ்விரு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படும் காலம் ஒன்று உருவாக வேண்டுமானால், அது உடனடிச் சாத்தியமில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேசமயம், பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை குறைக்கும் வகையில் அரசியல் யாப்பு திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும்,

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனே ஐக்கிய தேசிய முன்னணி அரசு செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

# பொ. ஐ. மு. உறுப்பினர்கள் மஹிந்தவுக்கு மாசு கற்பிக்கும் வகையில் செயற்படுகின்றனராம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவராக தான் பதவி ஏற்றது முதல், பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் தனக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என மகிந்த ராஜபக்ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

ஊவாமாகாண சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதுளை மாவட்ட பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

எதிர்க்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றது முதல், இவர்கள் பத்திரிகைகள் மூலம் என்னை இழிவு படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் மக்கள் மத்தியிலும் இவர்களின் இவ்வாறான செயல்களினால் எனக்கு அபகீர்த்திஏற்பட்டுவருகிறது.

கட்சியிலிருந்து என்னை வெளியேற்ற சிலர் முயற்சித்துவரும் இவ் வேளையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசும், பொதுஜனஐக்கிய முன்னணியினுள குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகிறது.

கட்சிகளினதும் தனிப்பட்ட சிலரினதும் எதிர் நடவடிக்கைகள், முயற்சிகள்எத்தனை தான் இடம்பெற்றாலும், என்னை கட்சியிலிருந்து விலக்கவோ வேறுபடுத்திப்பார்க்கவோ முடியாதுஎனவும்அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (உ-8)

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

12 தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தில் 21 ஆம்திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ஷ)

## மைதானம் புனரமைப்பு

(ஆனைக்கோட்டை)

வேலணை சேர்துரைசுவாமி மகாவித்தியலயத்தின் விளையாட்டு மைதானப் புனரமைப்புக்கென பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினால் 2 இலட்சம் ரூபாவழங்கப்பட்டுள்ளது,

இந்நிதிமூலம் விளையாட்டு மைதானப் புனரமைப்பு இடம்பெற உள்ளதாக பாடசாலை அதிபர் பெ.அருணகிரிநாதர் தெரிவித்தார். (உ-201)

## புங்குதீவில் பரிசோதிக்கப்படாத இறைச்சி விற்பனை

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் சுகாதாரப் பரிசோதகரின் முத்திரையிடப்படாத இறைச்சி விற்பனை செய்யப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மேற்படி இறைச்சிக் கடைகளில் விற்கபபடும் இறைச்சியை வாங்க பொது மக்கள் பின்னடித்துவருவதாகவும் கூறப்படுகிறது. (உ-75)

## தெய்வீக இசை அரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் இரண்டாம் நாளான இன்று, துர்க்காதேவி மணிமண்டபத்தில் எஸ். நித்தியானந்தனின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (உ)

## கோதுமை மா இறக்குமதி சட்டக் கட்டுப்பாடு தளர்தல் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கான சட்டக் கட்டுப்பாடுகளை தளர்த்தும் நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவை இறக்குமதி செய்யும் பிறிமா நிறுவனத்துடன் அமைச்சரும், பிரதமரின் ஆலோசகர் ஆர். பாஸ்கரலிங்கமும் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளை அடுத்து பாவனையாளர்க்கு தேவையான மாவை விநியோகிக்க பிறிமா நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. (உ-8)

## திருவள்ளுவர் மகாசபை நிர்வாகிகள் தெரிவு

(ஏழாலை)

அகிலஇலங்கை திருவள்ளுவர் மகாசபையின் நடப்பாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

தலைவராக பி. ஜீவானந்தம், பொதுச் செயலாளராக ச. தில்லைநாதன், நிர்வாகச் செயலாளராக சி. சுதந்திரன் பொருளாளராக மா. சிவலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-206)

## தென் பச்சிலைப்பள்ளி பாடசாலை மூன்றை உடன் இயக்க முடிவு

(திருநெல்வேலி)

விடுதலைப்புலிகளின்கட்டுப்பாட்டுப்பகுதியில்உள்ள தென் பச்சிலைப்பள்ளிப் பகுதிப் பாடசாலைகளை மீள இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பளை பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் அலுவலகத்தில் பிரதேசசெயலர் கே. புத்திசிகாமணி தலைமையில்நடைபெற்றது.

புலோப்பளை றோ. க. த. க. பாடசாலை, முகாவில் அ. த. க. பாடசாலை, சேரன்பற்று அ. த. க. பாடசாலை ஆகியனவற்றை உடன் இயக்கவும்,

ஏனைய பாடசாலைகளைப் படிப்படியாக இயக்கவும் நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. (உ-43)

## மீன்விலை அதிகரிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் மீனின்விலை தற்போது கூட்டப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் ஒருகிலோ மீன் 60 ரூபாவில் இருந்து 70 ரூபாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (உ-250)

## ஜி.ரி.சற் நிதியுதவி

(ஆனைக்கோட்டை)

வேலணை சேர் துரைச்சுவாமி மகாவித்தியாலயத்தில் பலசல கூடம் அமைக்க வென ஜி.ரி.சற் நிறுவனத்தினால் 4 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (உ-201)

## முன்பள்ளிக்கு குடிநீர் உபகரண உதவி

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு சென்ஜோன்ஸ் முன்பள்ளிக்கு குடிநீர் மற்றும் விளையாட்டு உபகரணங்களை சிறுவர் பாதுகாப்பு நிதியம் அண்மையில் வழங்கியது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் சிபார்சின் பேரில் மேற்படி உபகரணங்கள் வழங்கப்பட்டன (உ-75)

# அமைச்சர் ஜயலத்தின் ஏற்பாட்டில் யாழில் கற்றாக் கண் சத்திர சிகிச்சை

> பிரிட்டனிலிருந்து வந்தவர்களால் நாளுக்கு அறுபது பேர் வீதம் பத்து நாட்களில் 600 பேருக்குக் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

''கற்றாக்'' நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை யாழ் குடாநாட்டில் அதிகரித்து வருகிறது.

பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் யாழ். போதனா வைத்தியசாலையில் இதற்கான சிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருப்பினும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இனம் காணப்படுபவர்களுக்கும் அக்காலப் பகுதியில் இந்நோய்க்குச் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படுவர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுகிறது.

இந்தக் குறையைத்தீர்த்து வைக்கும் வகையில் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் ஏற்பாட்டில் கற்றாக் கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளவென பிரிட்டனில் இருந்து சேவையுள்ளம் கொண்ட 13 பேர் இங்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 இலங்கையர்களும் அடங்குவது குறிப்பிடத்தக்கது வைத்தியர் மலகம் பெரேரா தலைமையில் வைத்தியர்களான கிரான்சிஸ் வேதநாயகம் திருமதி சாரதா நற்குணராஜா, திருமதி ஐ. சிவயோகம், எம். யேசுதாசன், ,எம். லோகேந்திரன், ஏ. விஜயகுமார் கே சப்பறின், கே.டற்றல் ஸ்பில் மற்றும் தாதியர்களான ஏ. மேரிமாதவன்,ஏ மாத் சீ.குடின், தொண்டரான ஆ.ஜே. குடின்ஸ் ஆகியோர் இப்பணிக்காக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் சத்திர சிகிச்சைகளுக்கு ஏதுவாக 2 மில்லியன் பெறுமதியான மருந்துகள் உபகரணங்கள் என்பவற்றை தம்முடன் எடுத்து வந்துள்ளனர்.

நேற்று, சம்பிரதாய பூர்வமாக அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவால் ஆரம்பிக்கப்பட்ட இக் கண் சத்திர சிகிச்சை எதிர்வரும் 22ஆம் திகதி வரையான 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

நாளுக்கு60பேர்என்றவீதத்தில்10 தினங்களிலும் 600பேர் இச்சிகிச்சைகளுக்கு உள்ளாக்கப்படவுள்ளனர்.

இச்சிகிச்சைக்கு உட்படுபவர்களுக்கு 500பேருக்கு கண்ணில் வில்லைபொருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கு ரூபா 22ஆயிரம் செலவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கஞ்சாவுடன் நபர் பிடிபட்டார்

(யாழ்ப்பாணம்)

கஞ்சாவைத்திருந்த நபரொருவர் மதுவரி உத்தியோகத்தர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

நேற்றுசங்கானை மதுவரிக் காரியாலய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் காலையடி பண்டத்தரிப்பு பகுதியில் திடீரென நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போதே பிரஸ்தாபநபர் மதுவரி உத்தியோகத்தர்களிடம் பிடிபட்டார். (இ)

## ஆசிரியர்களுக்கு சைவசமய பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவபரிபாலன சபை நடத்தும் 10,11 ஆம் தரங்களுக்கு சைவசமயம் போதிக்கும ஆசிரியர்களுக்கான சைவசமய பாடக் கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ் பல்கலைக் கழக கலைபீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரின் தொடக்கவுரையைத் தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெறும். (உ)

## பட்டினிக்கெதிரான நிறுவனப் பணிகளுக்கு பொதுமக்கள் பாராட்டு

(மந்திகை)

பட்டினிக்கெதிரான நிறுவனம்,வடமராட்சிப் பிரதேசத்தில் மேற்கொண்ட பயன்மிகு திட்டங்களுக்காக அதன்பிரதிநிதிவிளாடி மில பூல் அண்மையில் அப்பிரதேச மக்களால் கௌரவிக்கப்பட்டார்.

வடமராட்சி பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாரளுமன்ற உறுப்பினர் எம் கே. சிவாஜிலிங்கம், தமிழீழ விடுதலைபபுலிகள் வல்வெட்டித்துறைப் பொறுப்பாளர் பாரதி,வடமராட்சி கடல் தொழிலாளர்கள் சங்கங்களின் சமாச செயலாளர் க. சூரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பகுதியில் பட்டினிக்கெதிரானநிறுவனத்தினால் வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பு, மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல், சுழற்சி முறைக்கடன்வசதி ஆகியபணிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது (உ-23)

## தோழமையுணர்வோடு...

பரவசம் அடைந்தார் சேக்கிழார் போதாதென்று' அடித்தொண்டன்', அணுக்கத்தொண்டன், 'அருங்குலத்து அரும் தமிழ் ஊரன் மன்று தொல்புகழ்நாவலூரரான் என்றும் சிறப்புப் பெயர்பெற்றார்.

தில்லைக் கூத்தன் எழுந்தருளி உள்ள தலங்கள் தோறும் சென்ற எம் முத்தமிழ் வித்தகர்களும், திருவாதவூரரும், இறைவனை நான்கு நிலைகளில் நின்று பாடிப் போற்றினார்கள், சரியை, கிரியை, யோகம்,ஞானம் என்ற நிலைகளை அடிப்படையாக கொண்டு அமைந்தவை இவர்கள் பாடல்கள். இவற்றை கொஞ்சுதமிழ், செஞ்சுதமிழ், விஞ்சுதமிழ்,உருகு தமிழ் என்றும்கூறலாம் என அறிஞர்பெருமக்கள்கூறுவர். திருஞான சம்பந்தர் தன்னை இறைவனுடைய செல்லக் குழந்தையாக பாவனை செய்து தனது பிஞ்சு மன வெளிப்பாடாக கொஞ்சி கொஞ்சிபாடி தனது வேண்டுதல்களை நிறைவு செய்தார். அப்பர்இறைவனின் தாசனாக தன்னை வருத்தி வருந்திப் பாடி தன் வேண்டுதலைக்கூறி வேண்டிக்கொண்டார் சுந்தரர் தன்னை இறைவனின் உயிர்த் தோழனாக அதாவதுசகமார்க்கவழியில் நின்று கேட்டுக்கேட்டுப் பெற்றுக் கொண்டார் மாணிக்கவாசகர்பேரின்பநாதனைக் கூடும் பேறு வேண்டி சன்மார்க்க நிலையில் நின்று பாடிப்பணிந்தார்.

தோழமை

உலகியல் வாழ்வில் உள்ள உறவு நிலை உணர்வுகளில் மேலானது தோழமைஉணர்வு இந்த உணர்வுஉயிர்க்குயிராய் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஏற்படுமானால் அந்த தோழமைக்கு நிகர் இல்லை. 'உயிர்காப்பான் தோழன்' என்ற ஒரு முதுமொழி சிவனையும் சுந்தரரையும் தொடர்பு படுத்தியதாகவும் இருக்கலாம். ஏனெனில் இந்த தோழமையால் சுந்தரருக்காக, சுந்தரேசர் பட்ட துன்பம் சொல்ல முடியாது பொய்சாட்சி சொன்னவரை காப்பாற்றியது தூது போனது. நம்பி, ஆற்றில் இட்ட பொன்னைக்குளத்தில் எடுக்க வைத்தது. நெல் மூடை சுமக்க பூதங்களை அனுப்பியது,இதுபோன்றஎத்தனைஎத்தனைஉதவிகளைநட்பின்காரணமாக பெற்றார்சுந்தரர். இவையெல்லாம்எப்படி நடந்தது; ஒருவரின்மேல்ஒருவர் கொண்ட அந்த உணர்வின் தன்மையால். எனக்கு எது வேண்டும் என்று நான் கேட்டால் என் நண்பன்மறுக்காது தருவான், அவன் மற்றவர் போலல்ல,என்றுதன் மனதில் ஒரு திடமான நம்பிக்கையைக் கொண்டிருந்தார் சுந்தரர். அதனாற்றான்பலமுறை பல பல வேண்டி பெற்றுக் கொண்டார். அவரின்கோரிக்கைகளும் கோரும் தன்மையும் எப்படி இருக்கின்றது. நண்பா படிக்கின்றேன் நீதமிழ்சுவைக்கின்றாய் ஆனால்என்பாடோ

'வம்பமரும் குழலாள்
பரவை இவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர்
அடியேன் இட்டளம்கெடவே'

'மைத்து ஆடும் தடம்
கண்பரவை இவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடி
யேன் இட்டளம் கெடவே'

'கோளிலிஎம்பெருமான
குண்டையூர்சில நெல்லுப்
பெற்றேன்
ஆள் இல்லைஎம்பெருமான்
அவை அட்டித்தரப்பணியே'

'கந்தமுதல் ஆடை ஆபர
ணம் பண்டாரத்தே
எனக்குப் பணித்தருள
வேண்டும்'

'கறிவிரவு நெய்சோறு
முப்போதும் வேண்டும்'

'முத்தாரம்இலங்குதிருமணி வைரக் கோவையுடன், கஸ்தூரி கமழ் சந்தனம்' என்பனவும் எனக்கு நீ அவ்வப்போது தந்திட உன் தொண்டர்களுக்கு பணித்திட வேண்டும் எனறும், கேட்கின்றார் நம்பியாரூரர். இந்தஅளவிற்குஎந்த ஒரு அடியவரும் கேளாதவற்றையெல்லாம் கேட்டுப் பெற்றவர் சுந்தரர். இந்த அளவிற்கு அவர் உரிமையுடன்கேட்கவும் கங்கை வேணியன் இல்லையென்னாது அவற்றை கொடுத்தற்குஉயரியதால் நற்பண்பு நிறைந்த நட்புணர்வே என்றால்மிகையாகாது இதன் மூலம் இறைவனும் ஆரூரரும் உயிருக்குயிரானநட்பின்பெருமையை எமக்கு உணர்த்தாமல் உணர்த்தி உள்ளார்கள். இந்த அளவு வேறு எந்தஅடியவர்க்கும் உதவாத இறைவன் எந்த நோக்கத்திற்காக இப்படி யெல்லாம்உதவினார்என்பதை சுந்தரரேபின் கழிவிரக்கம் கொண்டு, பலவிதமான சோதனைகட்கு ஆளான போது, தான் தன்நலன்கருதி இறைவனை எப்படியெல்லாம் ஏவுதல் செய்துநன்மைகளைப் பெற்றேன். என் அறியாமையால் என்று இரங்குகின்றார். இறைவனோ 'நம்தமர்ஆரூரர்' என்கிறார்.

## தங்க நகைகளைப் படையினர் மீட்டு ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வறுத்தலைவிளான் தெல்லிப்பழையைச் சேர்ந்த கே.கலியுகவரதன் என்பவர் இடம்பெயர்வுக் காலத்தில் தனது வீட்டில் புதைத்துவிட்டுச் சென்ற 13 பவுண் தங்க நகைகளை, சுடந்த வாரம் படையினர் மீட்டு உரியவரிடம் கையளித்ததக யாழ். பாதுகாப்பு தலைமையகத்தைச் சேர்ந்த கப்டன் பீ.ரீ லியனகே தெரிவித்துள்ளார். (உ)

## சான்றிதழ்கள் உடனடியாகக் கிடைக்க வழிவகை

(கொழும்பு)

முக்கியமான பரீட்சைகளுக்கு பெறுபேறுகளை அறிவிக்கும் போதே அவற்றிற்கானசான்றிதழ்களையும்எதிர்காலத்தில் அனுப்பிவைப்பதென்று பரீட்சைத்திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் பரீட்சை ஆணையாளர் அமரக்கோன் இதனைத் தெரிவித்தார்.

முதலில் அறநெறிப்பாடசாலை (தம்ம) இறுதிப்பரீட்சையில் சித்திபெற்றிருக்கும் 11.000 பேருக்கு இது வழங்கப்படவுள்ளது. இப்பொழுது க.பொ.த (உ/த) மற்றும் (சா/த) பரீட்சார்த்திகளுக்கு தோற்றியவர்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது. (உ)

## விகல்பணி பெண்ணியக்குழு நல்லெண்ண விஜயம்

(தென்மராட்சி)

தென்பகுதியில்இயங்கிவரும் விகல்பணி எனும் பெண்ணிய அமைப்பின் 50 உறுப்பினர்கள் கடந்தவாரம் குடாநாட்டுக்கு நல்லெண்ண விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

பெண்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு விஜயம் செய்திருந்த இவர்கள் குடாநாட்டின் பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டதுடன், பொதுமக்களையும், இடம்பெயர்ந்தவர்களையும் சந்தித்து உரையாடினர்.

வலிகாமம் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்துக்கு இவ் அமைப்பினர் சென்ற சமயம், அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் தமது சோகக்கதைகளை கண்ணீர் மல்க எடுத்துக்கூறினர் (உ-77)

## நெதர்லாந்து தூதரக அரசியல் பிரிவு அதிகாரி இன்று யாழ். விஜயம்

கொழும்பிலுள்ள நெதர்லாந்துதூதுவராலயத்தின் அரசியல் பிரிவுஅதிகாரி இன்று யாழ்ப்பாணம்வருகைதரவுள்ளார்.

இவர் இன்றுபிற்பகல் 1.30 மணிக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்றநிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகளைச் சந்தித்துகுடாநாட்டு நிலைமைகள்பற்றிக்கலந்துரையாடவுள்ளார். (உ-77)

## மக்கள் போராட்டத்தால் மட்டு. வீதி திறப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமுக்குமுன்னால் உள்ள வீதியை திறப்பதற்கு இராணுவத்தினர்இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு கிராம அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் வீதியைத் திறக்கக்கோரி வீதிமறிப்பு போராட்டம் நடைபெற்ற போது-அவ்விடத்துக்குசென்ற சிறப்பு இராணுவத்தளபதி எவ். பாலசூரிய,மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஆகியோர் காலை 6. 00மணி தொடக்கம் மாலை7.00மணி வரை இப்பாதையை திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் என உறுதியளித்தனர்.

இதனையடுத்துசுனில் தென்னக்கோன் தலைமையிலான படைத்தரப்புகுழுவொன்றுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின்அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்துபாதையை திறக்க இணக்கம்காணப்பட்டுள்ளது. (உ-8)

## மதுவிற்க மறுத்தவரை மதுப்பிரியர் தாக்கினார்

(மந்திகை)

வீட்டில் வைத்து கள் விற்க மறுத்தசீவல்தொழிலாளியை, மதுப் பிரியர் மறைந்திருந்து தாக்கினார்.

இச்சம்பவம் புலோலி கூடவில் பகுதியில் அண்மையில் இடம் பெற்றது.

அண்மைக்காலமாக சட்டவிரோதமாக வீடுகளில் மதுபானம்விற்பவர்களை பொலிஸாரும், மதுவரிப் பரிசோதகர்களும் பிடிப்பதில்தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அச்சமடைந்த சீவல் தொழிலாளி வீட்டில் வைத்து கள்ளை கொடுக்க மறுத்துவிட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த மதுப்பிரியர்சீவல்தொழிலாளி தவறணையில் கள்ளைக் கொடுத்து விட்டு வரும் வழியில் பற்றையில்மறைந்திருந்து தாக்கினார்.

காயமடைந்த சீவல் தொழிலாளி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

# நல்லூர் ஆலய சுற்றாடலில் தோற்புழுவின் தாக்கம்

நல்லூர் ஆலய மஹோற்சவ காலத்தில் அங்கப்பிரதட்சணம் செய்த அடியவர்கள் பலருக்குத் தோல்நோய் ஒன்று ஏற்படுவது கடந்த சில வருடங்களாக அவ தானிக்கப்பட்டு வருகின்றது. ஆரம் பத்தில் இத்தோல் நோயானது ஒவ்வாமையினால் ஏற்படுவதாக பலராலும் நம்பப்பட்டது ''தோற் கடி'' என்றே பலரும் இதனைக் கூறியிருந்தனர். பல இடங்களில் வைத்திய சிகிச்சையும் அவ் வாறே வழங்கப்பட்டது. நோய்த் தாக்கம் பரவலாக இல்லாமையி னாலும் யாழ்ப்பாணத்தில் இந் நோய் அரிதாகையாலும் இத னைப்பற்றி எவரும் பெரிதாக எடுக் கவில்லை. கடந்த வருடம் அதி களவு பக்தர்கள் பாதிப்படைந் ததைத் தொடர்ந்தே இவ் விடயம் பலருக்கு தெரிய வந்ததுடன் பத்தி ரிகைகளும் முக்கியத்துவம் கொடுக் கத் தொடங்கின. ''தோற்துளைப் புழு'' என்றே இதனை விபரித்தி ருந்தனர்.

### தோற்புழுவின் தாக்கம்

தோற்துளைப்புழு என்றால் என்ன? இது எவ்வாறு ஏற்படு கிறது? இதனால் எமக்கு ஏற் படும் பாதிப்பு என்ன? இதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்? என்ற கேள்விகள் அங்கப்பிர தட் சணம் செய்யும் அடியவர்களிடம் மட்டுமன்றி பலராலும் வினவப் படுகின்றன.

நாய்களுக்கு ஏற்படும் கொழுக் கிப்புழுவினாலேயே இத்தோல் நோய் ஏற்படுகின்றது என்பதனை யாழ் மருத்துவபீட ஒட்டுண்ணி யல் துறையினர் உறுதிப்படுத்தி யுள்ளனர்.

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் இருந்து சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளையும், தோற் சிகிச்சை நிலையத்தில் பாதிக்கப்பட்ட அடி யவர்களிடம் இருந்து பெறப்பட்ட தோல் மாதிரிகளையும் ஒப்பிட்டு நோக்கியே இந்த முடிவு பெறப் பட்டது.

நா.கீர்த்தன், இ.கோபித்
மருத்துவபீட மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

இத்தோல் நோய்க் காரணி யான நாயின் கொழுக்கிப்புழுக் குடம்பிகள் மண்ணில் இருந்து உடலின் மென்மையான பகுதி களில் தோலைத் துளைத்து உட் புகுந்து தாக்கத்தை ஏற்படுத்து கின்றன. பொதுவாக மென்மை யான உடற்பகுதிகள் மண்ணுடன் தொடர்பு ஏற்படுத்துவதில்லை. எனவே இந்நோய்த் தாக்கம் ஏற் படாது. ஆனால் அங்கப் பிரதட்சணம் செய்யும் போதும், மணலில் இருக்கும் போதும், மணலில் விளையாடும் போதும் எமது உடலின் மென்மையான பகுதிகள் மண்ணுடன் தொடர்பு ஏற்படுத்துகின்றன. நோய்த்தொற் றும் ஏற்படுகின்றது. இப்புழுக்கு டம்பிகள் பொதுவாக மனிதனின் உட்தோலை துளைக்கும் சக்தி அற்றன. எனவே மற்றைய விலங் குகளின் குருதி, நிணநீர் ஊடாக பரவுவது போலல்லாது தோலிற்கே இவற்றின் தாக்கம் மட்டுப்படுத் தப்பட்டுள்ளது. ஆனால் தோலில் காயங்கள் ஏற்பட்டு இருப்பின் அவற்றின் மூலம் குருதியை அடைந்து பாதிப்பு ஏற்படுமா என் பது அறியப்படவில்லை.

இத்தோல் நோய் 1995ம் ஆண்டு அனர்த்தங்களின் பின் னரே நல்லூர்ப் பகுதியில் ஏற் படத் தொடங்கியது. பல வருடங் களாகத் தொடர்ச்சியாக அங்கப் பிரதட்சணம் செய்யும் அடியவர் களின் கூற்றே இது. இத்தோல் நோயினால் பாதிக்கப்பட்டு வைத் திய உதவியை 1999ம் ஆண்டு முதல் பல அடியவர்கள் நாடியுள் ளனர். யாழ் மாநகர சுகாதாரப் பிரிவினருக்கும் இந்த விடயம் தெரிந்திருந்தது. ஆனால் சென்ற ஆண்டு அதிகளவு பக்தர்கள் பாதிப்படைந்ததைத் தொடர்ந்தே இவ்விடயம் பலருக்கு தெரியவந் ததுடன் பத்திரிகைகளும் முக்கி யத்துவம் கொடுக்கத் தொடங் கின.

### இத்தோல்நோய் எப்படி இங்கு வந்திருக்கலாம்

*கோயில் சுற்றாடலில் பரப் பப்பட்ட மணல் நோய்த் தொற்று உள்ளதாக இருக்க லாம்.*

வழமையாக மணல் அள்ளப் படும் இடங்களில் மணல் அள்ளு வது தடைசெய்யப்பட்டு இருந்த மையினாலும், மணலுக்குத் தட் டுப்பாடு இருந்தமையினாலும் கிடைத்த மணலை சுகாதாரக் கவனிப்புகளின்றி பரப்பியதனால் இந்நிலை ஏற்பட்டது. சில வரு டங்களுக்கு முன்னர் பரப்பப்பட்ட மணல் அழுக்கானதாகவும், கூடாத மணமுடையதாகவும், குப்பை கழிவுகளுடையதாகவும் இருந்ததும் அடியவர்கள் விசனம் அடைந்ததும் மறுக்க முடியாதது.

*நாய்கள், கால்நடைக ளின் மலம்மூலம் ஏற்பட்டு இருக்கலாம்.*

நாட்டுச் சூழ்நிலையாலும் இடம்பெயர்வினாலும் நாய்களும் கால்நடைகளும் பல்வேறு இடங் களில் இருந்தும் நல்லூர்ப் பகு திக்கு வந்தமையினால் அவற் றின் மலம் மூலம் நோய்த் தொற்று ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் ஒரு நோய்த்தொற்றை குறிப்பிட்ட இடமொன்றில் ஏற் படுத்த போதியளவு நோய்க்கா ரணி அவசியம். எனவே இம்மு றையில் நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்பு இருப்பினும் குறை வானதாகும்.

*கோயில் சுற்றாடலிற்கு வரும் கழிவு நீரினால் ஏற் பட்டு இருக்கலாம்.*

ஆனால் மழை வெள்ளம் தவிர வேறு கழிவுநீர் கோயில் சூழலுக்கு வருவதில்லை. அத் தோடு வெள்ளத்தினால் நோய்க் காரணி கொண்டுவரப்படின் வெள் ளத்தோடு அடித்துச் செல்லப் பட்டுவிடும், தேங்கி நிற்கும் நீரே நோய்த்தாக்கத்தை ஏற்படுத்த லாம். எனவே இம்முறையிலும் நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புக் குறைவானதாகும்.

இப்புழுத்தாக்கத்தைக் கட்டுப் படுத்துவதாயின் பல வழிகளில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டி இருப்பதுடன் மக்களின் ஒத்து ழைப்பும் அவசியம். யாழ் மாந கர சுகாதாரப் பிரிவினர் சில நட வடிக்கைகளை இந்த வருடம் மேற்கொண்டு இருப்பது வரவேற் கத்தக்கதாகும். இந்நடவடிக்கை களைக் கண்டிப்புடன் நடை முறைப்படுத்துவதுடன் மக்க ளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட வேணடும்.

*கோயில் சுற்றாடலிலுள்ள மணல் தொற்றுநீக்கப்பட வேண்டும்.*

நோய்த்தொற்று இல்லாத மணலைப்பரப்புவதன் மூலம் மட் டும் இதனைக் கட்டுப்படுத்த முடி யாது. ஏனெனில் புதிய மணலும் நோய்த்தொற்றுக்கு உள்ளாக லாம். இதனைக்கட்டுப்படுத்த குறித்த கால இடைவெளியில் போதுமான அளவு தொற்றுநீக்கி விசிறப்படவேண்டும்.

ஓரிரு நாட்கள் தொற்றுநீக் கியை விசிறுதல் போதுமான தல்ல. அத்துடன் அதிகாலை யிலேயே விசிற வேண்டும், ஏனெ னில் அதிகாலையிலேயே இப்பு ழுக் குடம்பிகள் அதிகளவில் இருக்கும். அத்துடன் அங்கப் பிரதட்சணம் செய்பவர்களும் அதி காலையிலேயே செய்கின்றனர். தொற்று நீக்கியை விசிறுதல் இப் புழுவின் முட்டைகளை அழிக்க மாட்டாது. புழுக்குடம்பிகளையே அழிக்கும். எனவே தொடர்ச்சி யான தொற்றுநீக்கி விசிறல் அவசியமாகின்றது.

*வளர்ப்பு நாய்களுக்குப் பூச்சிமருந்து கொடுத்தல்.*

மணல் தொற்றுநீக்கப்பட்டா லும் மீண்டும் மீண்டும் நாய் களில் இருந்து மீள் தொற்று ஏற்படும் இதனைத் தடுக்கக் கோயில் சுற்றாடலிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு பூச்சி மருந்து கொடுத்து தொற்று நீக்கப்பட வேண்டும். இதனைத் தகுந்த கண்காணிப்புடனும், கண்டிப்பாக வும் செயற்படுத்த வேண்டும். ஏனெனில் சிலர் நாய்களுக்கு பூச்சி மருந்து கொடுக்காது விட லாம். இது நாய்களுக்கும், மண லுக்கும் மீள்தொற்று ஏற்பட வழிவகுக்கும். கட்டாக்காலி நாய் களை அழிப்பதன் மூலமும் நாய்கள் கோயில் சுற்றாடலில் மலம் கழிப்பதை தடுப்பதன் மூல மும் நாய்களுக்கும், மணலுக் கும் மீள்தொற்று ஏற்படாது ஓர ளவு தடுக்கலாம். இதற்கு இப் பகுதி மக்களின் பூரண ஆதரவு தேவைப்படும்.

*நோய்த் தடைமுறை*

அதிகாலையில் அங்கப் பிர தட்சணம் செய்யாது சற்று மணல் உலர்ந்தபின் அங்கப்பிரதட்ச ணம் செய்வதாலும் இத்தோல் நோயிலிருந்து பாதுகாத்துக்கொள் ளலாம். ஈரலிப்பான மணலில் இருத்தலையும் மணலில் விளை யாடுவதையும் தவிர்த்தல் நல் லது.

இத்தோல்நோயினால் பாதிக் கப்படின் வைத்திய உதவியை நாடவும். ஏனெனில் இதன் மூலம் ஏற்படும் கடி, சொறி காரணமாக வேறு நுண்ணங்கித் தொற்றுக் கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது டன் சிலவேளை ஆபத்தாகவும் இருக்கலாம். சிலர் பிறர்கூறும் மருந்துகளையும் மருந்துக் கடை களில் எழுந்தமானமாக வழங் கப்படும் மருந்துகளையும் பயன் படுத்துவது கவலைக்குரியதா கும். ஏனெனில் சில மருந்துகள் பாரிய பக்க விளைவுகளை ஏற் படுத்தலாம். எனவே வைத்திய ஆலோசனையின்றி எந்த மருந் தையும் பாவித்தலைத் தவிர்க்க வும். தற்போது இந்நோய்க்கு மின்சிகிச்சையே வழங்கப்பட்டு வருகிறது. இதற்குப் பயந்தே பலர் ''கடி பரவாயில்லை கரன்ட் பிடிக்க வேண்டாம்'' என்று சிகிச்சை பெறாதுள்ளனர்.

இந்நோய்க்குரிய மருந்துகள் யாழ்ப்பாணத்தில் இல்லை. எனவே சுகாதாரப் பிரிவினர் இம்மருந்து களை கொள்வனவு செய்து விநி யோகித்தால் பேருதவியாக இருக்கும்.

---

## நல்லூரான் திருவடிக்கு-02



### எமக்காக உருகு!

மொழிக்குத் துணையானாய் முன்செய்த மூர்க்கப்
பழிக்குப் புகலாய்ப் படர்ந்தாய் - வழிக்குள்
பெருகும் இடரிடராய்ப் பீறுதே வேலா
உருகி எமக்கும் உதவு.

- நயினைச் சோதி -

### பதமதனில் உறங்க வரந்தா!

இதயமதி லேபு குந்த இனியவுன தாணி னைந்து
இரவுபக லேப ணிந்து - தொழுவோர்கள்
இருநிலம தேபி றந்து உழலுவினை யேய ழிந்து
இனியபத மேயு கந்து - அருள்வேலாயு
கதறுமடி யார்கள் துன்பம் சிதறவரு ளேபு ரிந்து
கமலபத வாழ்வு தன்னைத் - தரவேணும்
கருதுமறை யோது மிந்ரன் பெருமையுறு வாழ்வு கந்த
கருணைதர வேயென் முன்னர் - வரவேணும்
அதமமது மாள நின்று நிதமுமருள் வாரு முந்தன்
அடியிணைய தேவ ணங்கித் - தமிழாலே
அரியபுகழ் பாடு மெந்தன் கவலையது மாள வுந்தன்
அருளதனை வாரி யெந்தற் - கருளாயோ?
பதமதனை யேப ணிந்த கதியதில னேனுக் குந்தன்
பதமதனி லேயு றங்கும் - வரந்தாராய்
பகரரிய தான வுந்தன் அருளதனை வார நல்லைப்
பதியதனி லேய மர்ந்த - வடிவேலா

- முருகநேசன் -

### அருள் செய்யாயோ!

சுந்தரத் தமிழால் உன்னைப் பாடவந்தேன்
எழில்மிகு உன்தன் திருஉரு காணவந்தேன்
ஞானவடிவானவனே வீரவேல் ஏந்திய
சரவணா குகனே நல்லூர்க் கந்தா
குறவள்ளி எழில் தெய்வயானை மணாளா
நிதம் சூழ்ந்துனைப் போற்றி ஏத்திடும்
அடியவர்கள் படும் இன்னல்கள் களைந்து
இன்பம் பெருகிட அருள் செய்யாயோ

- நயினை விஜயன் -

### புத்தமுதப் பொங்கலென வீதி வருவாய்!

எடுப்பு

*கருணையொலி சிந்திவிளை யாடிவருவாய் – கருணைக்*
*கண்திறந்து எங்களையும் காத்து அருள்வாய்*

தொடுப்பு

*அருணகிரி நாதர்திருப் புகழ்மணக்க – அடியார்*
*அன்புடனே பாடவினை நீக்கியருள்வாய்*

முடிப்பு

*நித்தமுனை நினைந்திட வழிகாட்டி – மன*
*நிம்மதியை எங்கள்நெஞ்சில் நிலைநாட்டி*
*வித்தைபுரி வேல்கொண்டு விளையாடி – வீரம்*
*விளைந்திட பகைகெடும் நிலை கூட்டி*
*சித்தமதில் நித்தமொளிர் பயம் நீக்கி – நல்ல*
*தீர்வினைக் கண்டுகளி கொண்டாட*
*சத்தமின்றி வந்தமைதி சமாதானம் – இந்த*
*தரணியில் தளைத்திட வழிகூட்டாய்*

- சு. குகதேவன் -

### ஓடிவருவாய் சரணம்!

முருகா சரணம் குமாரா சரணம்
கந்தா சரணம் கடம்பா சரணம்
நல்லைப் பதியான் குமாரா சரணம்
கலியுக வரதா சரணம் சரணம்
உமயவள் பாலா சரணம் சரணம்
உருக்கொண்டு ஓடிவருவாய் சரணம்.

- பிரகான -

### செப்பிய மொழிகள்!

தேரடியில் செல்லப்பர் - நாளும்
தேன்மொழியை பேசிடுவார்
ஈரடியில் யோகப்பர் - நாளும்
ஈசனோடு பேசிடுவார்.

கந்தனோடு தமிழர்கள் - நாளும்
கவிதையில் பேசிடுவர்
நந்தவனக் குமரனோடு - நாளும்
நன்மைகளை பேசிடுவர்

- இருபாலை புலேந்திரராசா -

# உலக தரிசனம்

## ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக் குழுவை ஈராக் அனுமதிக்காது

### தகவல்துறை அமைச்சர் கண்டிப்புடன் தெரிவிப்பு

(பக்தாத்)
ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக்கண்காணிப்புக் குழுவை ஈராக்கினுள் அனுமதிக்கப் போவதில்லை என அந்நாட்டு தகவல் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாரிய அளவில் அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாக அமெரிக்கா கூறி வருவதில் எந்த விதமான உண்மையும் இல்லை.

ஐ நா.சபையின் ஆயுதக் கண்காணிப்புக் குழுவினர் தமதுபணியினை 1998ம் ஆண்டே முடித்துக்கொண்டு விட்டார்கள் இதனால், அவர்களை அனுமதிப்பது குறித்து ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹுசைன் ஐ நா. பிரதிநிதிகளுடன் விவாதிக்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ நா. சபையின் அணு ஆயுத பரிசோதகர்களை அனுமதிப்பது தொடர்பான பேச்சுக்களை நடத்த வருமாறு ஈராக் அழைப்பு விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் இவ்வாறான முன்னுக்கு பின் முரண்பாடான கருத்துக்களை நோக்கும் போது ஆயுத பரிசோதனை குறித்த விடயத்தில் ஈராக் திடமான ஒரு கொள்கையை கொண்டிருக்கவில்லை என சர்வதேச அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

(உ-8)

## வணிக நிறுவனங்கள் மீது புலன் விசாரணை நடக்கிறது

(புதுடில்லி)
அமெரிக்காவிலுள்ள நூற்றுக்கணக்கான சிரிய, முஸ்லிம் மற்றும் அரபு வணிக நிறுவனங்களைப் பற்றி அதிகாரிகள் புலன்விசாரணை செய்யத் தொடங்கியுள்ளனர்.

கிரிமினல் நிதி மோசடிகளுக்குப் வெளிநாட்டுத்தீவிரவாதக் குழுக்களுக்குப் பணம் அனுப்பப்படுவதற்கும் இடையே உள்ள தொடர்பைக்கண்டறிய அதிகாரிகள் முயன்று வருகின்றனர்.

இந்த வணிக நிறுவனங்கள் தீவிரவாத அமைப்புக்களுக்காக ஆண்டொன்றுக்கு இலட்சக்கணக்கான டொலர்கள் திரட்டுவதாகத் தெரிவிக்கப் படுகிறது

செப்ரெம்பர் 11 பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பிறகு நடத்தப்படும் விரிவான புலனாய்வு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த வணிக நிறுவனங்களின் கணக்கு வழக்குகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. (ஷ)

## இந்தியா-இங்கிலாந்து கிரி. ரெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது

(புதுடில்லி)
இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே ரொன்பேயில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் ரெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஐந்தாவது மற்றும் இறுதி நாள் ஆட்டத்தை நேற்றுமுன்தினம் 2 விக்கெட் இழப்புக்கு 99 ஓட்டங்களுடன் இந்தியா ஆரம்பித்தது

சச்சின் டெண்டுல்கர் அபாரமாக ஆடி 92 ஓட்டங்களைப்பெற்றார். ராகுல் டிராவிட் 115 ஓட்டங்களையும், சௌரவ் கங்குலி 99 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்தியா முதல் இனிங்ஸில் 357 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 424 ஓட்டங்களையும் பெற்றது.

இங்கிலாந்துமுதல் இனிங்ஸில் 617 ஓட்டங்களையும் பெற்றது. (ஷ)

## 1283 பேருக்கு சவுதியில் எயிட்ஸ் பாதிப்பு

(ரியாத்)
சவூதி அரேபியாவில், ஆயிரத்து 283 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பல நூற்றுக்கணக்கனோர் இதன் தொற்றுதலுக்கு ஆளாகி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில் சவூதிப் பிரஜைகள் எத்தனைபேர், வெளிநாட்டுப் பிரஜைகள் எத்தனை பேர் என்ற விபரங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெளியிடவில்லை.

(உ-3)

## இந்தியத்துணை ஜனாதிபதியாக பைரங்சிங் ஷெகாவத்

(புதுடில்லி)
இந்திய துணை ஜனாதிபதி தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட பைரங்சிங் ஷெகாவத் வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தேர்தலில் 149 வாக்குகள் வித்தியாசத்தில் எதிர்க்கட்சிகளை தோற்கடித்து இவர் வெற்றி பெற்றுள்ளார்.

இத்தேர்தலில் வாக்களிக்க மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## பலஸ்தீன அமைச்சரை சி. ஐ. ஏ. பணிப்பாளர் சந்தித்துப் பேச்சு

(ஜெருசலேம்)
இஸ்ரேல் - பலஸ்தீன வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக பலஸ்தீன உள்துறை அமைச்சர் அப்துல் ரஸாக் அல்-யஹ்யா வேர்ஜியாவில் சி. ஐ. ஏ. பணிப்பாளர் டெனட்ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இவர்களின் பேச்சுவார்த்தை சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்றுள்ளது.

(உ-3)

## இந்தியாவுக்கு பத்து பதக்கங்கள்

(புதுடில்லி)
கொழும்பில் நேற்று முன்தினம் முடிவடைந்த 14 வது ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 5 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது. (ஷ)

## அடையாள உண்ணாவிரதம்

(புதுடில்லி)
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று முன்தினம் தமிழகத்தின் பல பிரதேசங்களிலும் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

தமிழகத்தின் சங்கரன் கோவில் என்னும் இடத்தில் நடத்தப்பட்ட அடையாள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு வை கோவின் தாயார் தலைமைதாங்கினர். (உ-8)

## கண்டி நெடுஞ்சாலையில் லொறி குடை சாய்ந்தது

### எவருக்கும் உயிராபத்து நேரவில்லை

(கிளிநொச்சி)

கண்டி ஏ-9 நெடுஞ்சாலையில் கொக்காவிலுக்கும் முறிகண்டிக்குமிடையில் நேற்று முன்தினம் பிற்பகல் லொறி ஒன்று குடை சாய்ந்ததில் சாரதி உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர்.

லொறிக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த வாகனம் ஒன்றிற்கு வழி விட்டுக் கொடுக்க முற்பட்ட வேளை, இடையில் சைக்கிள் ஒன்று குறுக்கிட்ட போது ஏற்படவிருந்த உயிராபத்தை தடுக்க லொறிச் சாரதி முனைந்த வேளை சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி சரிந்தது.

லொறியில் வந்த 13 பேரில் 5 பேர் மட்டுமே காயங்களுக்கு உள்ளாகினர். லொறி குடை சாய்வதை உணர்ந்து அதில் இருந்த இளைஞர் ஒருவர் வெளியில் பாய்ந்து தப்பினார்.

இதே வேளை, லொறி குடை சாய்ந்த போது ஒரு இளைஞனை லொறியில் ஏற்றப்பட்டிருந்த எரு மூடிக் கொண்டதில் மூச்சுத் திணறிய போது லொறியிலிருந்து பாய்ந்த இளைஞன் சாதுரியமாகக் காப்பாற்றியதில் உயிராபத்து தடுக்கப்பட்டுள்ளது.

(உ-5)

## பாபா திரைப்படத்தை எவரும் பார்க்கக் கூடாது

### ராமதாஸ் கோபாவேசம்

(புதுடில்லி)
சந்தனக் கடத்தல் வீரப்பனை விரைவில் அழிக்க வேண்டுமெனக் கூறியரஜினிகாந்தின் பாபா திரைப்படத்தினை எவரும்பார்க்ககூடாது என பாட்டாளி மக்கள்கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மக்களிடம் கேட்டுள்ளார்.

நாகைமாவட்ட பூம்புகாரில் நடைபெற்ற வன்னியர்மன்ற மகளிர் கூட்டத்திலேயே ராமதாஸ்இவ்வாறுவேண்டுகோள் விடுத்தார்.

நடிகர் ராஜ்குமாரின் மகன் புனீத் ராஜ்குமார் நடித்த 'அப்பு' கன்னடப்படத்தின் நூறாவது நாள் விழா அண்மையில் நடைபெற்ற போது. அதில்கலந்து கொண்ட ரஜினிகாந் சந்தனக் கடத்தல் வீரப்பனை அழித் தொழிக்கவேண்டும் என தெரிவித்திருந்தார்

நடிகர் ரஜினிகாந்தின் இந்தக் கருத்தை கண்டிக்கும் முகமாகவே டாக்டர் ராமதாஸ், பாபா திரைப்படத்தினை எவரையும் பார்க்க வேண்டாம் எனகேட்டுக்கொண்டுள்ளார்.

கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டிருந்த போது, அது தொடர்பாக அதிக அக்கறை காட்டிவந்த நடிகர் ரஜினிகாந் ராஜ்குமார் விடுதலையாவதற்கு காரணமாக இருந்தவரும், தற்போது பொடா தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுசிறையில் இருப்பவருமான பழ. நெடுமாறனை விடுதலை செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## என்.டி. திவாரி வெற்றி

(புதுடில்லி)
உத்தராஞ்சல் மாநில முதலமைச்சர் என்.டி.திவாரி ராம் நகர் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார்.

அவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பி. ஜே. பி. வேட்பாளர் ராம்சேட்சிங் பிஸ்ரை சுமார் 23 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். (ஷ)

## அடிப்படைச் சுகாதார நிலைமை விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டமெங்கும் அந்தந்த பிரதேச செயலகங்களின் ஊடாக சனசமூக நிலையங்கள், கோயில்கள் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் குடிநீர் வசதிகள், மலசல கூடவசதிகள் ஆகிய விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

மேற்படி செயற்பாட்டிற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் அனுசரணை வழங்கி வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதிகள் இன்றி இருக்கும் பாடசாலைகளின் விபரமும் சேகரிக்கப்படுகிறது.

அடிப்படைச் சுகாதாரவசதிகள் இல்லாத நிலையில் எதிர் வரும் மாரி காலத்தில் ஏற்படும் தொற்றுநோய் அபாயத்தைத் தடுக்கவே இந்த முன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (உ-19)

## பொதுமகன் மீது பொலிஸார் தாக்குதல்

பருத்தித்துறை தும்பளை வாசி ஒருவர் அப்பகுதியில் கடமையில் இருந்த பொலிஸாரால் தாக்கப்பட்டதாக யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் கடந்த மாதம் 28 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மு சோமசுந்தரம்என்றஇந்த தாக்கப்பட்ட நபரின் மருத்துவ அறிக்கையை பரிசோதித்த பின்னர் இதுகுறித்த விசாரணை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விசாரணைஅதிகாரி ருவான் சந்திரசேகர தெரிவித்தார்.

(உ-6)

## அரசைப் பதவி கவிழ்க்க ஒன்று திரள வேண்டும்

### மக்களிடம் மகிந்த கோரிக்கை

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராக 1953 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மாபெரும் ஹர்த்தாலை நினைவுகூர்ந்தும் வாழ்க்கைச் செலவு உயர்வைக் கண்டித்தும் நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை எதிர்க் கட்சிகள் இணைந்து நடத்தின.

கொழும்பு லிப்ரன் சதுக்கத்தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது எதிர்க் கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில்,

1953 ஆம் ஆண்டு மாபெரும் ஹர்த்தால் நடைபெற ஏதுவான அதே சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. இந்நிலையில் நாட்டு மக்கள் அனைவரும் தமது சொந்தத் தேவைகளை மறந்து ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும்.

இதன் மூலம் தற்போதய அரசாங்கத்தைப் பதவி இறக்குவதற்கு மக்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பட்டி வீரக்கோன் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனா ஆகியோரும் உரையாற்றினார்கள். (ம)

உடம்பாடு இல்லாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடு உடனுறைந்தற்று

குறள்

# வலம்புரி

## ஒற்றுமை அவசியம்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரியின் தலைமையில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராக வீ. ஆனந்தசங்கரியைப்புனர்வாழ்வுஅமைச்சர் டாக்டர் ஜயலத்ஜெயவர்த்தனா நியமிக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனைத் தலைவராக நியமித்தார். இப்போது யாழ்மாவட்ட அபிவிருத்திக்குழுவிற்கு இரண்டு தலைவர்கள் ஒரு உறையில் இரண்டு வாள்களிருந்தால் நிலைமை எப்படி இருக்குமோ அதே நிலைமைதான்தற்போது ஏற்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவிற்கு அபிவிருத்திக்குழுத் தலைவரை நியமிக்கும் அதிகாரம் கிடையாதென்பது அமைச்சர் மகேஸ்வரனின் வாதம். இதனை பிரதமர் அலுவலகமும்ஏற்றுக்கொண்டது போல அமைச்சர் மகேஸ்வரனை இணைத்தலைவராக நியமித்துள்ளது. எனினும் இணைத்தலைவராக நியமிக்கப்பட்டது தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரனுக்கு அனுப்பிய கடிதத்தில்மற்றைய இணைத் தலைவர் யாரென்று குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை

ஒரு மாவட்டஅபிவிருத்திக் குழுவிற்கு இரண்டு தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் பாதிப்பு தமிழ் மக்களுக்கே.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடையே, உறவைப் பிரிப்பதாக அரசின் போக்குக் காணப்படுகிறது. எனவே இது விடயத்தில் தமிழ் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் செயற்பட வேண்டியது மிகமிக அவசியமாகும். இல்லையேல் பிரிந்தாளும் தந்திரம் மிக்க சிங்கள அரசிடம் தமிழ்மக்கள் எந்த உரிமையையும் பெற்றுக் கொள்ளமுடியாது போகுமென்பது தெளிவு.

எனவே யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுவின் பெயரால் தமிழ்ப்பிரதிநிதிகள் பிரிந்துநிற்பது தவிர்க்கப்பட வேண்டும்'

# தோழமையுணர்வோடு ஏவுதல் பல செய்து

# இறைவனிடம் பணிகொண்டவர் நம்பியாரூரர்

இன்று சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினமாகும்.

தம்பிரான் அருளினாலே தவத்தினால் மிக்கோர் போற்றும் நம்பி ஆரூரர் நாமம்' போற்றிப்பேறு பெற்ற நற்தவத் தோர்பற்றி பெரியபுராணம் தந்த சேககிழார் பெருமான், தன்செந்தமிழ்காவியத்தில் நயம்பட விளக்கிக் கூறியுள்ளார். எம் பிரான் தோழரான சுந்தரர்பெரியபுராணத்தில் முதல் இடைகடை ஆகிய பிரிவுகள்தோறும் சிறப்பித்துப்பாடப் பெற்றுள்ளார். திருத்தொண்டர் புராணத்தின்பாட்டுடைத்தலைவனாக தம்பிரான் தோழர் திகழ்கின்றார் சருக்கமுடிவுகள்தோறும் சுந்தரர் புகழ்பாடியே அடுத்த சருக்கம் ஆரம்பிக்கின்றார் சேக்கிழார்.

திருத்தொண்டர் புராணம்

அகிலாண்ட நாயகனாகிய கைலைவா சனைப்'பித்தா' என்று அழைத்தபெருமைஇவரைத்தவிர வேறுயாருக்குண்டு. பெரிய புராணம் திருக்கைலாய சருக்கத்தில் தொடங்கி, வெள்ளையானை மேல் சுந்தரர் திருக்கைலாயம் செல்லும் சருக்கத்துடன் நிறைவுபெறுகின்றது. பெரியார்கதைகூறும்புராணத்திற்கு சேக்கிழார் வைத்தபெயர் திருத்தொண்டர் புராணம்; அடியார்க்குஅடியானாகவுள்ள சுந்தரரைத்தன் மனம், வாக்கு, காயங்களால் போற்றியசேக்கிழார். அந்த திருத்தொண்டராக சுந்தரரை மனதிருத்தி இப்பெயரைவைத்திருக்கலாம்.

சுந்தரர் காலம்பற்றி வரலாற்று ஆசிரியர்களிடையே பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவியபோதும், இவர்காலம் கி.பி. 8ம் நூற்றாண்டாகத்தான் இருக்கவேண்டும் என்பது பெருமபாலாரின் முடிபாகும. சுடர் விட்டுமிகப்பிரகாசமாக எரியும் தீபசுடர்விட்டபடியே அணைவதும் உண்டு, இது போல்துடி துடிப்பாக பிரகாசித்த சுந்தரர் ஆக இந்த மண்ணுலகில் (18) பதினெட்டாண்டுகள் மட்டும் வாழ்ந்தார் முழுக்க, முழுக்க வேறு எந்தக்கலப்பும் இல்லாமல் தமிழில்பாடப்பெற்ற பெரிய மணவாளக்கோலம்

எம்பெருமானின் புகழ் பாடிய நாவுக்கரசர், ஞானசம்பந்தர், மணிவாசகர் ஆகியவர்களிலும் பார்க்க ஆள் உடை நம்பி அழகு மிக்க பொன் மேனியனாக விளங்கினார். சுந்தரனார். என்றும் மணவாளக்கோலத்துடன் தான் வீற்றிருப்பார். 'வடிவுடை நம்பி, ஆரூரன், செம் பொன்மேனிவளப்பாக' என்று

நயினை. ஆ. தியாகராசா

புராணம் பாடுவதற்கு வழி காட்டியாக இருந்தவர் சுந்தரர் என்றால் மிகையாகாது. சுந்தரர்பாடிவைத்த திருத்தொண்டர் தொகைதான் (63) அறுபத்திமூவர் வரலாறாக வெளிவந்தது. இந்தவகையில் சேக்கிழார் தன்புராண அரங்கேற்றத்தின்போது எப்படியெல்லாம் சுந்தரரைமனதாரவாழ்த்திவணங்கி இருப்பாரோ யாம் அறியோம்.

நயந்துநளி சொட்டச்சொட்ட இவர் அழகைக் சேக்கிழார் பாடி உள்ளார். தம்பிரான் தோழனாக ஆரூரனாக, இசைஞானி சிறுவனாக, ஊரனாக, சடையன் தன் காதலனாக, சிங்கடியாள் சேயனாக, திருநாவலூரனாக, நம்பியாக, வன்தொண்டனாக, வளப்பகை அப்பனாக, ஆலாலசுந்தரனாக, பல் பெயர் சூட்டிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சமூக ஆர்வலர்களை அதிருப்திக்குஉள்ளாக்கும்

# தமிழ்ப் பிரதேச முன்பள்ளிகளின் அவல நிலை

தமிழர் பிரதேசங்களில் நடத்தப்படுகின்ற முன்பள்ளி திட்டங்கள் போதிய தரமற்றவையாக இருந்துவருவது குறித்து வடபகுதியைச் சேர்ந்த கல்வியாளர்களும் சமூக ஆர்வலர்களும் பெரும் அதிருபதி தெரிவிதது வருகின்றனர்.

முன்பள்ளித்திட்டத்திற்கு அரசாங்கத்தின் உதவிகள எதுவும் கிடைப்பதில்லை. இவற்றினை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள, பொதுஅமைப்புகள மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் சிலவுமே பொறுப்பேற்று நடத்திவருகின்றன.

ஆயினும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் செயல்பட்டு வரும் 2 ஆயிரத்து 932 முன் பள்ளிகளிலும் தன்னலமற்ற சேவையாற்றி வருகின்ற முன்பள்ளி ஆசிரியைகளின் பிரச்சினைகள், தேவைகள் பற்றி இதுவரையும் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையே தொடர்கதைபோல உள்ளது.

போதாத வேதனம்

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து வேறு உத்தியோகம் எதுவும் கிடைக்காதநிலையில் சேவை மனப்பான்மையை அடிநாதமாகக்கொண்டு, தாம் நடைமுறையில் எதிர்நோக்கியுள்ள தம்மிடம் பயில்கின்ற மழலைகளின் கல்வி, எதிர் காலத்தைக் கவனத்தில் கொண்டு சேவையாற்றி வரும் முன்பள்ளிஆசிரியர்கள் பெறுகின்ற வேதனங்களைப் பற்றி ஆழ்ந்து நோக்கினால் கவலைதான் மீதமாகும்.

குறிப்பாக, உள்ளூராட்சித் திணைக்களத்தினால் சிலபிரதேசங்களில் நடத்தப்படும் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற மாதாந்த வேதனம் ஓரளவு கவர்ச்சிகரமானதாக இருக்கின்றது.

அதேசமயம் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களினால் யாழ் குடாநாட்டில் நடத்தப்பட்டு வருகின்ற500க்கும்மேற்பட்ட முன்பள்ளிகளில்சேவையாற்றும் ஆசிரியைகளில்அரைவாசிக்கு மேலானவர்களுக்கு எவ்வித ஊதியமும் வழங்கப்படுவதில்லை. மீதியானவர்களுக்கு மாதா மாதம் 300ரூபாவுக்கும் 500ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையே, பெற்றோர் பங்களிப்புடன் வழங்கப்படுகின்றது.

புறக்கணிப்பு

இன்றைய பொருளாதார நிலையில், இத்தகைய மிக மிகச்சிறிய தொகையுடன் முன்பள்ளி ஆசிரியைகள் எவ்வாறு வாழ முடியும் உண்ண முடியும்? உடுக்க முடியும்? சமூகத்தில் அந்தஸ்துடன் வாழ முடியும்? என்பது பற்றி யாருமே சிந்தித்துப் பார்க்கவில்லை. ஏன்? முயலவில்லை எனக் கூடக் கூறலாம்.

எமதுசமுதாயத்தின்அடுத்த சந்ததியைச் சேர்ந்த மழலைகளை நல்லவர்களாகவும். பண்பாளர்களாகவும். விவேகமுள்ளவர்களாகவும் ஆக்குகின்ற மிகவும் பொறுப்பு வாய்ந்த நிலையில் இருக்கும் முன்பள்ளி ஆசிரியைகள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்து வருகின்றனர் என்பது தான்யதார்த்த நிலையாகும்.

பயிற்சிகள்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனத்தையோ, அல்லது மதிப்பூதியத்தையோ வழங்கத்தயாராக அல்லது முன்வராத அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOS) அவர்களுக்கான பயிற்சிகளைப் பெருந்தொகை பணச் செலவில் நடாத்த முன்நிற்கின்றன. இதன் அடிப்படை நிலை புரியாத புதிராகவே உள்ளது.

இந்த நிலையில், முன்பள்ளி ஆசிரியர்களது எதிர்காலம் நிச்சயமற்றதாகஇருந்துவருவதால் கிராமங்களில், நகரங்களில் நடாத்தப்பட்டு வருகின்ற முன்பள்ளித் திட்டங்களில் சேவையாற்றுவதை- தமது நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் ஒரு தற்காலிக ''தங்குமிடமாகவே'' முன் பள்ளி ஆசிரியைகள் கருத வேண்டிய நிலை நிலவுகின்றது.

மேலும் முன்பள்ளித் திட்டங்களில் நமது மழலைகளுக்கு கல்வி புகட்டுவிக்க விரும்புகின்ற கிராமிய மட்டப் பெற்றோரில் 90 சதவீதத்தினர், தமது மழலைகளின் கல்விக்காகமாதாந்தம் ஆகக் குறைந்தது 30 ரூபாவைக் கூடச் செலவிடத் தயாராக வில்லை என்பது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரிய வருகின்றது.

பங்களிப்பு

அரசாங்கத்தின் ஆதரவு, அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு, பெற்றோரின் பங்களிப்பு மற்றும் கிராமிய தனவந்தர்களின் நிறைவான விசுவாசமான பங்களிப்பும் புரிந்துணர்வும் இல்லையேல் நவீன விஞ்ஞான உலகிலும் முன்பள்ளித் திட்டம் இன்னமும் ''கட்டை வண்டியின்'' நிலையிலேதான் இருந்து வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

முன்பள்ளித்திட்டத்தின் முக்கியத்துவம், அவசியம், பற்றி பந்தி பந்தியாக எழுதுபவர்களும், மேடை மேடையாகப் பேசுபவர்களும், அவற்றின் நடைமுறைப் பிரச்சினைகளை இன்னமும் புரியாதவர்களாகவே இருக்கின்றனர். என குடா நாட்டில் முன் பள்ளித் திட்டத்தில் ஆசிரியைகளாகப் பணி செய்து வருபவர்கள் சொல்லிக் கொள்கின்றார்கள்.

முன்பள்ளித் திட்டத்தில் பாண்டித்தியம், அனுபவம் பெற்ற ஆசிரியைகளின் வளங்களை நாம் இன்னமும் சரியாகப் பயன் படுத்த முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் வாழ்வில் எப்போது வசந்தம் வீசும்?


எம். கே. ஜீவகதாஸ்

## தினசரி தியானம்

### ஆற்றல்

அழகிய மனம், நல்ல ஆரோக்கியமான உடல், மற்றும் பல அபூர்வமான கொடைகளை இறைவன் உங்களுக்குத் தந்திருக்கிறார். தீய பழக்கங்களை மாற்றிக் கொண்டு, இராமநாமத்தின் துணையாலும் ஜெபம், தியானம், ஆகியவற்றின் துணையாலும் கண்ணிமைக்கும் நேரத்தில், மனத்தையும், இதயத்தையும் திருத்திக் கொள்ளுங்கள். இந்த நொடியிலேயே ஆரோக்கியமான மேலான ஆன் மீகப் பழக்கங்களை வளர்த்துக் கொள்ள முடியும். எல்லையற்ற ஆற்றல் உங்களிடம் இருக்கிறது. ஜெபத்தின் மூலம் அவற்றைத் தட்டி எழுப்புங்கள்.

-சுவாமி சிவானந்தர்



நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் பிரிட்டிஷ் கண்வைத்திய நிபுணர்களின் கண் சத்திர சிகிச்சையை புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைப்பதையும், சிகிச்சைப் பணிகள் நடைபெறுவதையும் படத்தில் காணலாம்.

## ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க கடும் முயற்சி

# அரசுக்கு நம்பிக்கை கோரும் பிரேரணை

# பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

### அமைச்சர் எம்.எச்.எம். அஸ்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கொண்டுவரும் பிரசாரத்தை முறியடிக்கும் நோக்கில், பாராளுமன்றத்தில் தமக்குள்ள பலத்தை நிரூபித்துக் காட்டும் வகையில் நம்பிக்கை கோரும் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

இவ்வாறு பாராளுமன்ற விவகார அமைச்சர் எம்.எச்.எம. அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இனிவரும் பாராளுமன்ற அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் புதிய சட்டமூலங்களில் இதுவும் ஒன்றாக அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள சட்டமூலங்களுக்கு தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் என்றும் அதேவேளை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இதற்கு ஆதரவு வழங்க உள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் மீதான நம்பிக்கை கோரும் தீர்மானத்தை அடுத்து ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான சட்டமூலம் ஒன்றையும் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு 150 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகிறது. தற்போது அரசாங்கத்திற்கு 131பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும் மேலும் 19 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டும் நோக்கில் எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அரசு பேரம் பேசிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## கடல்வழிப் பயணம் புலிகள் திருப்தி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடல்வழிப் பயணத்திற்கு இணங்கியுள்ளமை குறித்து விடுதலைப்புலிகள் திருப்தியடைந்திருக்கின்றார்கள் என்று யுத்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரியூட்டர் டெல்ஹிசன் தெரிவித்துள்ளார். (இ)

## தே.அ.அட்டைக்குப் பதிலாக புதிய அடையாள அட்டை

### உள்துறை அமைச்சர் தகவல்

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக உள்துறை அமைச்சர் ஜோன். அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளில் வழங்கப்பட்டுவரும் சர்வதேச தரத்திலான இந்த அடையாள அட்டையில் ஆள் ஒருவருடைய பிறப்பு, வதிவிடம், கல்வித் தகைமை மற்றும் குடும்பப் பின்னணி போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதாகவும் கணனி முறையில் தயாரிக்கப்பட்ட கலர் அடையாள அட்டையாக அது இருக்கும் எனவும் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய அடையாள அட்டைகளை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை உட்துறை அமைச்சின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(த)

---

### சாவகச்சேரியில் மீட்கப்பட்ட...

ணங்களுடனும் சீருடையுடனும் ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதியும் சாவகச்சேரி சேர்ச் வீதியில் ஆட்களற்ற வீடொன்றின் முற்றத்தில் இரு மண்டைஓடுகளுடன் எலும்புக் கூடுகளும் பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து சாவகச்சேரிப் பொலிசாரால் மீட்கப்பட்டன.

சாவகச்சேரி சேர்ச் வீதியில் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் கடந்த கால இடம்பெயர்வின் போது வீடுகளில் தங்கியிருந்து வெடிபட்டு இறந்தவருடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

---

### பேச்சுக்கான...

---

### ஜனாதிபதி...

---

### யாழ். மாநகர முதல்வர்...

இதேவேளை இச்சம்பவம் குறித்து மாநகர முதல்வர் செ.கந்தையனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

மாநகர சபையால் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடொன்றை 14 நாட்கள் கடந்த நிலையில் சபையின் சட்ட திட்டங்களை மதிக்காமல் அதனை உரியவரிடம் ஒப்படைக்கு

போது:

தான் முதல்வரைத் தாக்கவில்லை என்று கூறிய அவர் முதல்வரே மேசை மற்றும் ஜன்னல் கண்ணாடிகளை கையால் குத்திக்காயத்தை ஏற்படுத்தியதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை மாநகர அலுவலத்தில் வைத்து முதல்வரைத் தாக்கியமை மிகவும் கண்டிக்கப்பட வேண்

## சாவகச்சேரியில் மீட்கப்பட்ட...

ணங்களுடனும் சீருடையுடனும் ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதியும் சாவகச்சேரி சேர்ச் வீதியில் ஆட்களற்ற வீடொன்றின் முற்றத்தில் இரு மண்டைஓடுகளுடன் எலும்புக் கூடுகளும் பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து சாவகச்சேரிப் பொலிசாரால் மீட்கப்பட்டன.

சாவகச்சேரி சேர்ச் வீதியில் எடுக்கப்படட்ட எலும்புக்கூடுகள் கடந்த கால இடம்பெயர்வின் போது வீடுகளில் தங்கியிருந்து வெடிபட்டு இறந்தவருடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கெருடாவில் மாணாவளை வீதியில் மீட்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதியுடன் இராணுவ சீருடையும் ரி 56 ரக துப்பாக்கியும் நாட்குறிப்பேடும் லீவு விண்ணப்பப்படிவம் போன்ற பொருட்களும் மீட்கப்பட்டன.

நாட்குறிப்பேட்டில் எஸ்.ரி.ஜி. நிஷங்க எனப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

---

## பேச்சுக்கான...

கீசன், சிறப்புத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இப்பேச்சுவார்த்தையில் தாய்லாந்தில் ஆரம்பிக்கப்படவுள்ள பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் குறித்தும் அடுத்த கட்ட சமாதான நகர்வுகள் தொடர்பாகவும், இடைக்கால நிர்வாக சபை விடயங்கள் குறித்தும் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.(இ)


# பதவி வெற்றிடம்

எமது பத்திரிகைக் காரியாலயத்திற்கு

### விநியோக உதவி முகாமையாளர்

### தேவை

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தியடைந்த 30 வயதிற்குட்பட்டவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பங்கள் யாவும்**

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி
15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் 18ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும

குறிப்பு : சொந்தமான மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது அவசியமாகும்.

-நிர்வாக உத்தியோகத்தர்-


தமிழீழ விடுதலைப்புலிகளின் கடல் வழிப் பயணத்திற்கு இணங்கியுள்ளமை குறித்து விடுதலைப்புலிகள் திருப்தியடைந்திருக்கின்றார்கள் என்று யுத்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரியூட்டர் டெல்ஹிசன் தெரிவித்துள்ளார். (இ)

---

## ஜனாதிபதி...

வேற்று அதிகாரம் வழங்கப்பட்டது.

இவ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நாட்டுக்குப் பொருத்தமானது அல்ல அதனை நீக்கத் தக்க வகையில் யாப்பில் சீர்திருத்தம் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கருத்து அரச எதிர்க்கட்சிகளிடையே வலுப்பெற்றுள்ளது.

இந் நிலையில் சந்திரிகா குமாரதுங்காவின் தலைமையில் செயற்படும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்க்கும் என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கத் தக்க வகையில் புதிய ஒரு அரசியல் யாப்பை நிறைவேற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு திட்டம் வகுத்துள்ள போதிலும் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் சிக்கித் தவிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கு மாற்று ஏற்பாடாக ஜனாதிபதியுடன் இணங்கிச் சென்று ஐக்கிய தேசிய முன்னணி அரசு தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமையும் தெரிந்ததே. (இ)

இதேவேளை இச்சம்பவம் குறித்து மாநகர முதல்வர் செ.கந்தையனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

மாநகர சபையால் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடொன்றை 14 நாட்கள் கடந்த நிலையில் சபையின் சட்ட திட்டங்களை மதிக்காமல் அதனை உரியவரிடம் ஒப்படைக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் அரவிந்தன் கேட்டதாகவும் அதற்கு தான் மறுப்புத் தெரிவித்த போது தனது சகாக்களுடன் வந்து அலுவலகத்திற்குள் புகுந்து தன்னைத் தாக்கியதாகவும் தெரிவித்தார்.

தாக்குதலைத் தடுக்க முற்பட்ட போது தனது இரு கைளிலும் அலுவலகக் கண்ணாடி வெட்டி காயம் ஏற்பட்டுள்ளதாகவும் முதல்வர் வேதனையுடன் கூறினார்.

இது குறித்து மாநகர சபை உறுப்பினர் அரவிந்தனிடம் கேட்ட போது:

தான் முதல்வரைத் தாக்கவில்லை என்று கூறிய அவர் முதல்வரே மேசை மற்றும் ஜன்னல் கண்ணாடிகளை கையால் குத்திக்காயத்தை ஏற்படுத்தியதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை மாநகர அலுவலத்தில் வைத்து முதல்வரைத் தாக்கியமை மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்றும் இத்தகைய துர்ச்சம்பவத்தை தான் மிக வன்மையாகக் கண்டிப்பதாகவும் மாநகர சபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (இ-19)

---

## கைப்பற்றப்பட்ட...

யாழ். அலுவலகத்தில் குற்றப்புலனாய்வுப் பொலிசாரால் கைப்பற்றப்பட்ட 9மில்லிமீற்றர் துப்பாக்கிக்குரிய அனுமதிப்பத்திரம் வலிகிழக்குப் பிரதேச சபையில் இருப்பதாகவும், அத்துப்பாக்கி வலிகிழக்குப் பிரதேச சபைக்குச் சொந்தமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்த நீதிபதி திருமதி இளங்கோவன் அடுத்த வழக்கு விசாரணையில் மனுவைச் சமர்ப்பிக்குமாறும் அதேவேளை மேற்படி மனுவை நீதிமன்றப் பதிவேட்டில் பதிவு செய்யுமாறும் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணை இம்மாதம் 20ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(த-43)

---

## புலிகள்...

அறிவிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த செயதியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அப்பால் கடல் எல்லைகளை தளர்த்தியுள்ளதன் மூலம் விடுதலைப் புலிகள் சுதந்திரமாக கடற்பயணம் மேற்கொள்ள அரசு வாய்ப்பு ஏற்படுத்தி உள்ளது.

இதன் மூலம் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

இதேவேளை நாட்டின் அரசியல் அமைப்பிற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையே முறுகல் நிலவவில்லை என்றும் இத்தகைய நிலை காணப்பட்டால் ஜனாதிபதியின் இணக்கப்பாடு இன்றி விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கம் கைச்சாத்திட்டிருக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறினார். (இ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 14.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.